பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 2 புதன்கிழமை (18-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:295

## தாய்லாந்தில் நேற்று 2ஆவது நாளாகப் பேச்சு:

# கண்ணிவெடிகளைப் புதைக்காதிருப்பதை உறுதிப்படுத்த அரசு-புலிகள் ஒப்பந்தம்!

சட்டாஹிப்,செப்.18

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக சர்வதேச நாடுகளின் உதவிகளைக் கோர கூட்டாக வேண்டுகோள் விடுப்பது என்று இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் தீர்மானித்திருக்கின்றனர்.

அதேவேளை -

எக்காரணத்தைக் கொண்டும் நிலக் கண்ணிவெடிகளை மீண்டும் புதைப்பதில்லை என்பதை உறுதிப்படுத்தும ஒப்பந்தம் ஒன்றிலும் இருதரப்பினரும் கையெழுத்திடவிருக்கின்றனர்.

அரசாங்க - விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிகள் நேற்று இரண்டாவது நாளாக சட்டாஹிப் கடற்படைத் தளத்தில் பேச்சுகளை நடத்தினர். நேற்றுக்காலை 9 மணிமுதல் 12 மணி வரை அவர்கள் பேச்சுகளில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர்கள் முதல் சுற்றுப் பேச்சுகளை நடத்தினர். வடக்கு - கிழக்கில் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தே இப்பேச்சுகளில் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான சர்வதேச நாடுகளின் உதவிக்கு இருதரப்பினரும் கூட்டாக வேண்டுகோள ஒன்றை விடுப்பார்கள் என தாய்லாந்துப் பேச்சுகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறின என்று வெளிநாட்டுச் செய்திச் சேவை தெரிவிக்கின்றது.

வடக்கு - கிழக்கில் பத்து லட்சத்திற்கும் 15 லட்சத்திற்கும் இடைப்பட்ட தொகையிலான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்று உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன.

இக்கண்ணிவெடிகளை அகற்றுவது குறித்தும் இருதரப்பினரும் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுகளில் ஆராய்ந்திருக்கின்றனர்.

நேற்றுக்காலை 9 மணிமுதல் 12 மணிவரை நடைபெற்ற பேச்சுகள் மீண்டும் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகின. அவை மாலை 5.30 மணிவரை நீடித்தன.

வடக்கு - கிழக்குப் புனர்வாழ்வு குறித்து நேற்றைய பேச்சுகளில் ஆராயப்படவிருந்தது. இன்று இப்பேச்சுகளின் இறுதித் தினமாகும்.

கண்ணிவெடிகளை இருதரப்பினரும் மீண்டும் புதைப்பதில்லை என்று உறுதியளிக்கும் ஒப்பந்தம் குறித்து நேற்றைய பேச்சுகளில் முடிவுசெய்யப்படவிருந்தது.

வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்திருக்கும் மக்களை அப்பிரதேசங்களில் மீண்டும் குடியமர்த்த இவ்வாறான ஓர் ஒப்பந்தம் அவசியம் என இருதரப்பினரும் கருதுகின்றனர்.

கண்ணிவெடிகள் தொடர்பான உலக நாடுகளின் ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை இதுவரை கையெழுத்திடவில்லை. வடக்கு - கிழக்கில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஹெல்கிஸன் இந்தியாவுக்கு பறந்தார்

# பாலாவின் பயணம் தொடர்பாக ஆராய!

## பிரபாவை வன்னியில் சந்தித்து அடுத்தகட்டப் பேச்சுக்கு வியூகம்

- பட்டாயாவிலிருந்து 'உதயன்' விசேட பிரதிநிதி ந.வித்தியாதரன் -

சட்டாஹிப்,செப்ரெம்பர்18

**அரசு - புலிகள் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கும் நோர்வேக் குழுவின் தலைவரான பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் திடீரென தாய்லாந்தில் இருந்து இந்தியாவுக்குச் சென்றுள்ளார். தாய்லாந்துப் பேச்சின் முதற் சுற்று முடிந்ததும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னி செல்ல இருக்கிறார். அவருடைய பிரயாண ஒழுங்குக்காகவே ஹெல்கிஸன் அவசரமாக இந்தியாவுக்குப் புறப்பட்டார் என்று கூறப்படுகிறது.**

முதல் சுற்றுப் பேச்சு இன்று முடிகிறது. அது முடிந்ததும் நேரே வன்னிக்குச் சென்று தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேச்சு விவரங்களை அவருக்கு அறிவிக்க விரும்புகிறார் அன்ரன் பாலசிங்கம். அத்துடன், அடுத்த சுற்றுப் பேச்சில் கலந்துகொள்வதற்கு முன்னர் அதுபற்றிப் பிரபாகரனுடன் சேர்ந்து வியூகம் வகுக்கவும் பாலசிங்கம் விரும்புகிறார்.

சிறுநீரக மாற்றுச்சிகிச்சை பெற்றிருப்பதால் அவரால் அடிக்கடி அங்குமிங்கும் பிரயாணம் செய்ய அவரது உடல்நிலை இடங்கொடுக்காது. அதனால் தமது இருப்பிடமான லண்டனுக்குத் திரும்புவதற்கு முன்னர் வன்னிக்குச் செல்ல அவர் உத்தேசித்திருக்கிறார்.

முன்னர் லண்டனிலிருந்து மாலை

(14 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நடந்த இரண்டாம் நாள் பேச்சுக்களின் பின்னர் விடுதலைப் புலிகளின் அணித் தலைவரும் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கமும் அரசகுழு தலைவரான அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் தனிப்பட்ட முறையில் பேசுவதை படத்தில் காணலாம்.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 9 மாதங்கள் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.18

வடக்கு-கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்தப்படவிருந்த தேர்தல் ஒன்பது மாதங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு இது தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜூன் மாதம் 25

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்க ஜனாதிபதி தீர்மானம்!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்கான பிரேரணையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருக்கிறார்.

இந்தப் பிரேரணை இன்று பகிரங்கப்படுத்தப்படும். இதன் பின்னர் பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க ஜனாதிபதி ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் என்று அரச ஊடகம் ஒன்று நேற்று மாலை தெரிவித்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் பட்சத்தில் அவர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்வார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக்கொண்டு கட்சியை தனது கட்டுப்பாட்டில் கட்டுக்கோப்பாக வைத்திருக்கும் ஆரம்ப முயற்சியில் ஜனாதிபதி இறங்கியிருக்கிறார் என்று செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

# எதிர்பார்த்ததைவிடப் பெரும் முன்னேற்றம் அடுத்த சுற்று பேச்சு ஒக்ரோபர் கடைசியில்!

## பேராசிரியர் பீரிஸ் 'உதயனுக்குப்' பேட்டி

"எதிர்பார்த்ததைவிட பேச்சில் பெரும் முன்னேற்றம். மக்களின் நலன்பேணும் பணிகளுக்கு வேண்டிய பணத்தைக் கேட்டு சர்வதேச சமூகத்திடம் நாமும் புலிகளும் இணைந்து செல்லக்கூடிய நிலைமை வருகிறது. பணத்தை சிவரக் கையாளுவதற்கான கட்டமைப்பும் இருக்கிறது. அடுத்த சுற்றுப் பேச்சு ஒக்ரோபர் கடைசியில் நடக்கும். அப்போது நிலைமையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும். - இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் பீரிஸ்.

தாய்லாந்து சட்டாஹிப் நகரில் அரச குழுவுக்குத் தலைமை தாங்கும் பேராசிரியர் பீரிஸ் அங்கு வைத்து 'உதயன்' பிரதிநிதிக்குப் பேட்டி அளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

முதல்சுற்றுப் பேச்சின் இரண்டாவது நாளில் எதிர்பார்த்ததைவிட முன்னேற்றம். நாம் செய்யவேண்டிய முன்னுரிமைப் பணிகள் எவை என்பதை அடையாளம் கண்டுள்ளோம்.

உதவி வழங்கும் நாடுகளுக்கு எமது உண்மையான தேவைகளை எடுத்துக்கூறி அவற்றை இணங்கச் செய்யக்கூடிய நிலையை அடைந்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல கிடைக்கும் நிதி உதவிகளை சரிவரக் கையாளுவதற்கான சீரான கட்டமைப்பு இப்போது இருக்கிறது.

இப்போது இருதரப்பினரும் (அரசும், புலிகளும்) இணைந்தே மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான திட்டங்களுடன் செல்லக்கூடிய நிலையில் இருக்கின்றோம்.

சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை நாங்கள் நிறையவே சம்பாதித்து வைத்திருக்கின்றோம். அதை

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





தாய்லாந்தின் சட்டாஹறிப் கடற்படைத் தளத்தில் நடைபெற்று வரும் அரசு - புலிகள் இடையேயான பேச்சுக்களில் இரண்டாம் நாளான நேற்று மாலை இருதரப்பினரும் பேச்சு மேசையில் அமர்ந்திருந்து விடயங்களை அலசுவதையும் நேற்றைய பேச்சுக்கள் முடிவடைந்ததும் பேச்சு மண்டபத்துக்கு வெளியே புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க், அரச குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரோடு அளவளாவுவதையும் நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்ட அரச, புலிகள், நோர்வே பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

# விளையாட்டு

## கென்யாவுடனான ஆட்டத்தில் மேற்கிந்திய அணிக்கு வெற்றி!

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடரில் கென்ய அணியை மேற்கிந்திய அணி 29 ஓட்டங்களால் வென்றது.

நேற்று எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய




அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 261 ஓட்டங்களைக் குவித்தது.

பிரையன் லாரா 120 பந்துவீச்சுக்களை எதிர்கொண்டு 8 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட 111 ஓட்டங்களைப் பெற்றார். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் லாரா பெற்ற 15 ஆவது சதம் இது.

வவெல் ஹின்ட்ஸ் 7 பந்துவீச்சுக்களில் 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்டரி உட்பட 20 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 49.1 ஓவர்களில் 232 ஓட்டங்களுடன் சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

கென்ய அணி முதல் 2 விக்கெட்டுக்களையும் 51 ஓட்டங்களுடன் இழந்தது. எனினும், அணித்தலைவர் ஸ்ரீவ ரிக்கிலோ 91 பந்துவீச்சுகளில் 93 ஓட்டங்களைப் பெற்றார்.

47 ஆவது ஓவரில் அவர் ஆட்டமிழந்தார். அப்போது கென்ய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 219 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரிக்கிலோ ஆட்டமிழந்தபின் கென்ய அணியின் பின்வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்திய பந்துவீச்சாளர்களில் பெட்ரோ கொலின்ஸ் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மேர்வின் டிலோன், மகேந்திர நாகமூட்டோ, கிறிஸ் கைல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிரையன் லாரா தெரிவானார்.

இச்சுற்றுப்போட்டியில் குழு 3 இலிருந்து மேற்கிந்திய அணி ஒரு போட்டியில் வெற்றியும் ஒரு போட்டியில் தோல்வியையும் பெற்றுள்ளது. ள பற்றி அதில் வெற்றியீட்டியது.

தென்னாபிரிக்க - கென்ய அணிகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கென்யா வென்றால் மட்டுமே மேற்கிந்திய அணிக்கு அரையிறுதியில் பங்குபற்றும் வாய்ப்புகிடைக்கும். அல்லாவிடின், தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும். (ம)

## இன்றைய ஆட்டங்கள்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**நெல்லியடி ம.ம.வியில்**

★ 16 வயதுப்பிரிவு - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் இமையாணன் அ.த.க.வித்தி.

★ 18 வயதுப்பிரிவு - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் நெல்லியடி ம.ம. வித்தி.

**ஞானசாரியார் கல்லூரியில்**

★ 16 வயதுப்பிரிவு - தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் கலட்டி றோ.க.பாடசாலை.

★ 18 வயதுப்பிரிவு - தேவரையாளி இந்துக்கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**திக்கம் மைதானத்தில்**

★ 16 வயதுப்பிரிவு - ஞானசாரியார் கல்லூரி எதிர் விக்கினேஸ்வராக் கல்லூரி.

★ 18 வயதுப் பிரிவு - ஞானசாரியார் கல்லூரி எதிர் கொற்றாவத்தை அ.மி. பாடசாலை. (ம-ரி)

☆ ☆ ☆

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**18 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.

★ வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

★ மூளாய் சைவப் பிரகாச வித்தி. எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி. (ம-ரி)

## மாவட்ட மட்ட மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் அடுத்த மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழக வீர, வீராங்கனைகள் தமக்குரிய விண்ணப்பப்படிவங்களை 'அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்' இல் பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் தெரிவித்தார். (ம-ரி)



### உணவு, குடிதண்ணீர் இன்றி நான்கு நாள்களாக

## தமிழகத்தில் இருந்து திரும்பிய 7 பேர் மணற்பிட்டியில் தவிப்பு!

நெடுந்தீவு,செப்.18

தமிழகத்தில் இருந்து வன்னி நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் மணற்பிட்டியில் இறக்கப்பட்ட 7 பேர் உணவு மற்றும் குடிதண்ணீர் இன்றி நான்கு நாள்களாக நிர்க்கதி நிலையில் விடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் இருந்து கடந்த வியாழக்கிழமை இரு பெண்கள் உட்பட 9 பேர் படகு ஒன்றில் வன்னி நோக்கிப் புறப்பட்டதாகவும் - மன்னாருக்குச் சமீபமாக உள்ள மணற்பிட்டி ஒன்றில் இவர்களைப் படகோட்டிகள் இரவு நேரத்தில் இறக்கி விட்டுச் சென்றதாகவும் -

போதிய அளவு உணவு, குடிதண்ணீர் என்பவற்றை எடுத்துவராததால் அவர்கள் நான்கு நாள்களாகப் பட்டினி கிடந்ததாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் ஒருவர் நீந்தி நேற்றுக் காலை நெடுந்தீவை வந்தடைந்த பின்பே இத்தகவல்கள் தெரியவந்துள்ளன.

நேற்றுமாலைவரை அவர்கள் அங்கிருந்து மீட்கப்படவில்லை என்றும் அவர்மூலம் தெரியவந்தது.

மணற்பிட்டியில் விடப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

சுதன் (யாழ்ப்பாணம்), உதயன் (யாழ்ப்பாணம்), ரமணன்,(செட்டிகுளம்), குமுதினி (வவுனியா), லட்சுமி (வவுனியா), காந்தன் (வவுனியா), கிறேசிஸ் (மட்டக்களப்பு).

(ம-3-111)

## என்னுடன் நீந்தி வந்தவர் கடல் நீரில் மூழ்கிவிட்டார்

### நீந்திக் கரைசேர்ந்தவர் தெரிவிப்பு

"கடந்த வியாழக்கிழமை மன்னார் மணற்பிட்டியில் இறக்கப்பட்ட நானும் பானு என்ற இளைஞனும் கரைநோக்கி நீந்தத் தொடங்கினோம். சில மணி நேரங்களின் பின்னர் தொடர்ந்து நீந்த முடியாமல் பானு கடலில் மூழ்கி காணாமற்போனார். நான் தொடர்ந்து 36 மணித்தியாலங்கள் நீந்திய பின்னர் இந்திய மீன்பிடிப் படகு ஒன்றினால் காப்பாற்றப்பட்டேன்."

நெடுந்தீவுக் கரையை அடைந்த வவுனியாவைச் சேர்ந்த மயில்வாகனம் யோகன் (வயது 23) என்பவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் அச்சம்பவம் குறித்து விவரிக்கையில் தெரிவித்ததாவது:-

கடந்த வியாழக்கிழமை இரவு 10.45 மணியளவில் வள்ளம் ஒன்றில் என்னுடன் 9 பேர் வன்னி நோக்கிப் புறப்பட்டனர். அதிகாலை 3.15 மணியளவில் எங்களை மணற்பிட்டி ஒன்றில் இறக்கிவிட்டு வள்ளம் சென்றுவிட்டது.

மீன்பிடி வள்ளங்கள் ஏதாவது வந்து எம்மை மீட்கும் எனக் காத்திருந்தோம். போதிய உணவோடு குடிதண்ணீரோ எடுத்துவராததால் நாம் பட்டினி நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இதனையடுத்து, கடந்த சனிக்கிழமை நானும் வவுனியாவைச் சேர்ந்த பானு என்ற 24 வயது இளைஞனும் நீந்திக் கரைசேர முடிவு செய்தோம். அன்றே இருவரும் இணைந்து நீந்தத் தொடங்கினோம். அங்கிருந்து பெருங்கடலுக்கு சென்றபோது நீந்த முடியாத நிலையில் அவர் கடலில் மூழ்கிவிட்டார்.

நான் தொடர்ந்து நீந்தியபோது இந்திய படகு ஒன்றைக் கண்டேன் அவர்களிடம் உதவிகோரி அந்தப் படகில் ஏறினேன். அவர்கள் இலங்கை மீனவர் படகு ஒன்றிடம் என்னை ஒப்படைத்தனர்.

அந்தப் படகு மூலம் நேற்றுக் காலை நெடுந்தீவை அடைந்தேன். - என்றார் அவர். (ம-3-111)

# ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் அனுமதிக்க ஈராக் இணக்கம்!

லண்டன்,செப்.18

ஐ.நாவின் ஆயுதக் கண்காணிப்பாளர்களை ஈராக்குக்குள் ஆயுத சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட மீண்டும் அனுமதிக்க ஈராக் இணங்கியுள்ளது.

ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் நாஜி சப்ரி இந்த முடிவைத் தனக்குக் கடிதம்மூலம் தெரியப்படுத்தியுள்ளதாக ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் அனுமதிப்பது தொடர்பான நடைமுறை ஏற்பாடுகள் பற்றி பேச்சு நடத்த தயாராக ஈராக் உள்ளதாகவும் -

அதற்காக எவ்வித நிபந்தனைகளையும் அந்நாடு விதிக்கவில்லை என்றும் -

அனான் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து ஈராக்கிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் கூறுகையில் -

ஐ.நா. விதித்துள்ள தடைகளை அகற்றுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக ஆயுதக் கண்காணிப்பாளர்களை ஈராக் அனுமதிக்கவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் கூறியிருந்தார். அதற்கமையவே ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் அவர்களது பணியை மேற்கொள்ள அனுமதிப்பதென ஈராக் தீர்மானித்தது. ஆகவே, இந்த முடிவை ஈராக் எடுத்ததில் எவ்வித சந்தேகமும் ஏற்படத் தேவையில்லை என்று தெரிவித்தார்.

ஆயினும், ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைனை பதவியிலிருந்து அகற்ற தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ள அமெரிக்கா, 'பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அதிபர் சதாம் வெளியிட்ட ஏமாற்று அறிவிப்பே ஆயுதக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்கும் ஈராக்கின் முடிவு' என்று கூறியுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை ஈராக் வைத்துள்ளதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டையடுத்து ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் சோதனை மேற்கொண்டனர். 1998 ஆம் ஆண்டு அவர்களை நாட்டைவிட்டு ஈராக் வெளியேற்றியது. (ஒ)



ஜப்பானியப் பிரதமர் யுனிஷிரோ கொய்சுமிக்கும், வடகொரியப் பிரதமர் கிம் ஜொங் கில்லுக்கும் இடையேயான முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு நேற்று வடகொரியத் தலைநகர் பியோங் ஜங்கில் ஆரம்பமானது. பேச்சு ஆரம்பிக்க முன்னர் இரு தலைவர்களும் கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

## பாகிஸ்தானில் குண்டுவெடித்து ஒருவர் பலி!

இஸ்லாமாபாத்,செப்.18

தெற்குப் பாகிஸ்தானில் பயணிகள் பஸ் ஒன்றில் குண்டு வெடித்ததில் ஒருவர் இறந்தார்; 5 பேர் காயமடைந்தனர்.

ஹைதராபாத் நகரில் இந்தச் சம்பவம் நடந்தது.

உலக அரங்கில்

கராச்சியிலிருந்து இந்த பஸ் ஹைதராபாத்துக்கு வந்து சேர்ந்தது. சில நிமிடங்களில், இந்த பஸ்ஸில் குண்டு வெடித்தது.

காயம் அடைந்தவர்களில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்தனர். குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

## சுவீடன் நாட்டில் ஆளும் கட்சி வெற்றி!

ஸ்டொக்ஹோம்,செப்.18

சுவீடன் நாட்டுத் தேர்தலில், ஆளும் கட்சியான சமூக ஜனநாயகக் கட்சி தொடர்ந்து 3ஆவது முறையாக வெற்றி பெற்றது. இதனால் பிரதமர் கொரான் பேர்சன் ஆட்சி தொடர்ந்து நீடிக்கிறது.

சுவீடனில் கடந்த 70 ஆண்டுகளில் 60 ஆண்டுகள் ஆளும் கட்சியாக இருந்துவரும் சமூக ஜனநாயகக் கட்சி இப்போதைய தேர்தலிலும் வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது. இந்தக் கட்சி சார்பில் கொரான் பேர்சன் பிரதமராக இருக்கிறார்.

இந்தக் கட்சியுடன் முன்னாள் கம்யூனிஸ்டுகளைக்கொண்ட இடதுசாரி கிரீன்ஸ் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிட்டன.

இந்த அணிக்கு எதிராக கன்சர்வேடிவ்களைக் கொண்ட 4 கட்சிகளின் கூட்டணி போட்டியிட்டது. போட்டி கடுமையாக இருந்தது.

இதில் சமூக ஜனநாயகக் கட்சி, 53 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றது. எதிர்க்கட்சிக் கூட்டணி 43 சதவீத வாக்குகள் பெற்றுத் தோல்வி அடைந்தது. (ஒ)

# ஈராக் மீதான தாக்குதல்; சவூதியின் நிலைப்பாடு

றியாட்,செப்.18

ஈராக்மீது இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது என்று ஐ.நா. இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டால் அதன் பின்னர் ஈராக் மீதான தாக்குதலுக்கு சவூதி அரேபிய விமானத் தளங்களைப் பயன்படுத்த சவூதி இணங்கும் என்று அதன் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த இணக்கமானது ஈராக் தொடர்பான இறுதிமுடிவின் பின்பே எட்டப்படும் என்று சீ.என்.என். தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் வெளிவிவகார அமைச்சரான இளவரசர் செனட் அல் பஸீல் கூறியுள்ளார்.

ஈராக் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் அந்தப் பேட்டியில் கோரிக்கை விடுத்தார்.

ஈராக்மீது இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமெரிக்கா ஐ.நா. மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வரும்வேளையில், சவூதியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. (ம)



துருக்கியிலுள்ள அமெரிக்கத் தளம் ஒன்றில் தரித்துநிற்கும் எவ் - 16 ரக போர் விமானம்.

## உடன்கட்டை ஏறமுடியாத பெண் தீக்குளித்து மரணம்!

### இந்தியாவில் சம்பவம்

புதுடில்லி,செப்.18

கணவன் இறந்ததையடுத்து உடன்கட்டை ஏற முயன்றார் மனைவி. இந்த முயற்சி தோல்வியடைந்ததையடுத்து அவர் தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டு இறந்தார்.

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் ரதன்கான் கிராமத்தில் இந்தச் சம்பவம் நடந்தது.

தீக்குளித்து இறந்தவர் பெயர் மிதிலேஷ்(வயது 28). மிதிலேஷின் கணவர் உத்தம் சிங் கடந்த 12ஆம் திகதி மின்சாரம் தாக்கி இறந்தார். அவரது உடல் தகனம் செய்யப்பட்டபோது உடன்கட்டையேற மிதிலேஷ் முயற்சித்தார். ஆனால், உறவினர்கள் தடுத்துவிட்டனர். அவரை அறையில் வைத்துப் பூட்டினர். ஆனால், மிதிலேஷ் அங்கு தீக்குளித்து இறந்தார்.

இந்தச் சம்பவம் நடந்த பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் ஒரு பெண் தனது கணவன் இறந்தபின் உடன்கட்டையேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அமெரிக்க அழகிப் போட்டியில் இந்திய யுவதி!

அட்லாண்டிக் நகரம்,செப்.18

அமெரிக்க அழகிப் போட்டியில் இந்தியப் பெண் கலந்துகொள்கிறார்.

அமெரிக்காவில் வசிக்கும் பல வேறு நாட்டவரும் இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர். (ஒ)

## பிரேஸிலின் பெரும் சிறை மூடப்பட்டுவிட்டது

சயோபவுல்,செப்.18


பிரேஸிலின் மிகப்பெரிய சிறையான சான் பவுல் கரண்டிரு சிறைச்சாலை மூடப்பட்டுவிட்டது. இந்தச் சிறைச்சாலை கிளர்ச்சிக்கும் இரத்தக் களரிக்கும் பெயர்பெற்றது.

மூடப்பட்ட சமயம் இந்தச் சிறைச்சாலையில் 7ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது இந்தச் சிறைச்சாலையின் கொள்ளளவை விட இரு மடங்கு அதிகமாகும். இங்கு தடுத்து வைக்கப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் போதைவஸ்து கடத்தல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளாவர்.

இதனால் அங்கு அடிக்கடி கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டு இரத்தக் களரி இடம்பெறுவது வழமை.

இந்தச் சிறை மூடப்பட்டதையிட்டு மனித உரிமைக் குழுக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

10 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தச் சிறையில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கப் பொலீஸார் துப்பாகிப் பிரயோகம் செய்ததில் 100 கைதிகள் உயிரிழந்தனர். (ம)




## தீவிரவாதிகள் என்ற சந்தேகம் காரணமாக

# இஸ்லாமிய மாணவர்கள் மூவருக்கு கல்வியைத் தொடர அனுமதி மறுப்பு!

### அமெரிக்காவில் சம்பவம்

நியூயோர்க்,செப்.18

தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின்பேரில் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்ட மூன்று இஸ்லாமிய மாணவர்களுக்கு அவர்களது படிப்பைத் தொடரும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. உள்வாரி மருத்துவப் பயிற்சி பெற்றுவந்த புளோரிடா மருத்துவமனையில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அயான் கீத் (வயது 27), கம்ரேஸ் பூட் (வயது 25), ஒமர் குட்டாரி (வயது23) ஆகிய மாணவர்களுக்கே இந்தக்கதி ஏற்பட்டுள்ளது. ஆனால், தம்மீதான குற்றச்சாட்டை இந்த மூன்று மாணவர்களும் தீவிரமாக மறுத்துள்ளனர். இவர்கள் ஜோர்டான், ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தனது கடையிலிருந்து தீவிரவாதத் தாக்குதல் குறித்து விவாதித்ததாக உணவு விடுதி ஒன்றின் முகாமையாளர் ஒருவர் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார். உடனடியாக அங்கு விரைந்த பொலீஸார் அவர்களை அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

நீண்டநேர விசாரணையின் பின்னர் எந்தவிதக் குற்றச்சாட்டுகளும் இன்றி அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரும் கரிபியன் தீவான டொமினிகாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ரோஸ் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மருத்துவப் படிப்பை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தமது உள்வாரி மருத்துவப் பயிற்சிகளை (Internship) புளோரிடா மருத்துவமனை ஒன்றில் மேற்கொண்டிருந்தனர்.

தீவிரவாதத் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் மூவரும் விசாரணை செய்யப்பட்டதைத் தொடர்ந்து புளோரிடா மருத்துவமனை இவர்களுக்கான பயிற்சியை நிறுத்திவிட்டது. இவர்கள் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கும் 200 மின்அஞ்சல்கள் தமது நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டதை அடுத்தே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக மருத்துவமனையின் பணிப்பாளர் கூறியுள்ளார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர் சிறுபான்மையினர் மீதான இத்தகைய நெருக்குவாரங்கள் பெருமளவில் அதிகரித்திருப்பதாக மனித உரிமைக் குழுக்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (ம)




பாதிக்கப்பட்ட மாணவர்கள் செய்தியாளர்களிடம் உரையாற்றுகின்றனர்.

## அச்சுவேலியில் பதவிவெற்றிடம்

- போதனாசிரியர் (கணனி)
- முகாமையாளர்
- எழுதுவினைஞர் (கணனி, ஆங்கில அறிவுடையவர்)

விண்ணப்ப முடிவுதிகதி: 21.09.2002

வி.முகவரி: CIIT கணனிக் கல்லூரி,
சந்நிதி வீதி, அச்சுவேலி.

Note: குறைந்த விலையில் புதிய, பாவித்த கணனிகள் உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு. (8425)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 07 - 1927



மறைவு 19 - 08 - 2002

## திருமதி வைத்திலிங்கம் தங்கமுத்து

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரத்துவமடைந்த அன்னாரின் நினைவாக இன்று (18.09.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் 20.09.2002 வெள்ளிக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது இல்லத்தரசியின் மறைவுகேட்டு இல்லம் நாடிவந்து அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பறாளாய் வீதி,
சுழிபுரம். (8397)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கல்வியாளர் குழு யாழ். வருகிறது

யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு 65 பேர் அடங்கிய தென்னிலங்கைக் கல்வியாளர் குழுவொன்று இவ்வார இறுதியில் யாழ். வருகைதரவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இக்குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர். யாழ்மாவட்டத்தில் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

## விவசாயப் பயிற்சிநெறி

வலிகாமம்.தெற்கு,செப்.18

மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் குறுகிய கால விவசாயப் பயிற்சிநெறிக்கு பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாக நிறுவனத்தின் அதிபர் தெரிவித்துள்ளார்.

நான்கு மாதகாலத்துக்கு பயிற்சிகள் நடைபெறும். பயிரியல், பூங்கனியியல், கால்நடை பராமரிப்பு, விவசாய மூலதத்துவம் போன்ற பாடங்களை உள்ளடக்கியதாக இப்பயிற்சிநெறி அமையும். பயிற்சிநெறிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதோடு பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கல்வி பயின்ற 16 முதல் 26 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சிநெறியை மேற்கொள்ள லாம். இதில் சேரவிரும்புவோர் இம்மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு விவசாய நிறுவனத்திற்கு வரும்படி மேற்படி நிலைய அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-152)


# RAMCO CEMENT

# ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ (RAMCO) சிமெந்து (கோபுர மார்க்) விற்பனைக்கு வந்துவிட்டது.

★ தேவையான நிறுவனங்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

முன்கூட்டியே பதிவுசெய்பவர்களுக்கு இலவசமாக லொறி மூலம் விநியோகம் செய்யப்படும்.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதி நிறுவனம்:

## ஈஸ்வர பகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2350. (C/23861)



## ஏங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்




பஜாஜ் - எனது நண்பன்


பஜாஜ் - எனது கைஉதவியாளன்

வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.
அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.


பஜாஜ் - எனது மூத்தவன்

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ.191,350/=இலிருந்து மேல் (எல்லா வரிகளும் அடங்கும்)


பஜாஜ்- எனது காவலன்

### டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த.பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 074-700600, பக்ஸ்: 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்:
- 174B, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொ.பே: 08-228146, 08-238133-5
- 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ.பே: 027 50037
- 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ.பே: 041-27488, 041-28488, 041-28999
- நீதல் மாவத்தை, அம்பாறை. தொ.பே: 063-22997, 063-23662
- 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ.பே: 025-22676
- தளசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22369
- இல. 116, குருணாகல் வீதி, புத்தளம். தொ.பே: 032-65527

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர் ______
விலாசம் ______
சேவை நிலையம் ______ தொலை பேசி ______

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

உதயன்

## நல்ல ஆரம்பம்

ஓட்டப் பந்தயத்தில் ஒரு வீரரின் 'ஸ்ராட்' அதாவது அவர் ஓட ஆரம்பிக்கும் விதம் நல்லபடியாக அமைந்தால் அவர் வெற்றி ஈட்டுவது பெரும்பாலும் நிச்சயமாகிவிடுகிறது.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானத் தேடலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அது ஒரு நீண்ட நெடும்பயணம். இலக்கை அடைய நாள்கள் அல்ல, வாரங்கள் அல்ல, மாதங்கள் அல்ல, பல வருடங்கள் கூடப் பிடிக்கலாம்.

கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை தாய்லாந்தின் சட்டாஹிப் நகரில் இருதரப்பினரும் பயணத்தை ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பம் நன்றாகவே இருந்தது. அதனால் முடிவும் நல்லதாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டாஹிப் கடற்படைத் தளத்தில் மூடிய அறைக்குள் இருந்து ஐந்து மணி நேரம் இருதரப்பினரும் பேசினார்கள்.

முதல் சுற்றுப்பேச்சின் முதல்நாள் சந்திப்பு முடிந்து வெளியே வந்தவர்கள் முகமலர்ச்சியுடன் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்கள்.

பேச்சு வெற்றிகரமாக நடந்தது என்று அரசாங்கக் குழுத் தலைவர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய சுமுகமான சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது என்றும் அமைச்சர் பீரிஸ் சொன்னார். சமாதான முயற்சிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டால் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருதரப்பிலும் தோன்றியிருக்கிறது என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். முதல் நாள் பேச்சு இருதரப்புக்கும் வெற்றியைத் தந்திருக்கிறது; மகிழ்ச்சியை அளித்திருக்கிறது என்றும் அமைச்சர் பீரிஸ் புன்னகையுடன் முகம் மலர எடுத்துக் கூறினார்.

பேச்சுக்களில் கலந்துகொண்ட அரச குழு உறுப்பினர்களில் ஒருவரான முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஒரு படி மேலே சென்று பூட்டிய அறைக்குள் பேசப்பட்ட விடயங்களின் சாரத்தையும் சொன்னார்.

அடுத்தடுத்த சுற்றுப்பேச்சுக்களில் என்னென்ன விடயங்கள் பற்றிப் பேசுவது என்று ஆராயப்பட்டது.

மீள்குடியமர்வு, அதற்கான நிதி ஒதுக்கீடு, அபிவிருத்தி நிதியைக் கையாள்வது, அதற்காகப் புலிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளுக்கு வெளிநாடுகளினால் வழங்கப்படும் உதவிகளைப் பொறுப்பாகக் கையாள்வதற்கு ஒருங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்தும் விசேடமாக ஆராயப்பட்டது.

மேற்கண்டவாறாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தகவல் வெளியிட்டார். இது பலருக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டுவதாக அமைந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் நீண்ட கொடிய யுத்தத்தால் வீடு வாசல்களை இழந்தும் அவற்றை விட்டுச் சென்றும் அகதிகளாக எங்கெல்லாமோ அவல வாழ்வு வாழும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும்.

இடிபாடுகளால் அழிந்துபோயிருக்கும் நகரங்களையும் கிராமங்களையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டும். பொருளாதார வளம் பெருக்க அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

முக்கியமாக இந்தப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளைத் திறம்பட மேற்கொண்டு குறுகியகாலத்தினுள் மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியையும் வடக்கு - கிழக்கில் புதுப்பொலிவையும் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே புலிகள் தாங்கள் இடைக்கால நிர்வாகப்பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இடைக்காலநிர்வாகம் ஏற்படுத்த காலம் பிடித்தாலும் அதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு மக்களின் புனர்வாழ்வு மற்றும் பிரதேசத்தின் புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளைச் செய்யமுடியுமானால் அது ஒன்றே புலிகளுக்கு ஆத்மதிருப்தியை ஏற்படுத்தும். அரசும் புலிகளும் மனதார இணைந்து சமாதான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வெற்றி காண அது உதவும்.

'சுதந்திரத்துக்கு விலையாக எங்கள் உயிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்'
- லெப். கேணல் திலீபன்.



# அப்பாவிகளைக் கைதுசெய்வதன்மூலம் அச்சத்தை ஏற்படுத்த படையினர் முயற்சி!

## வடமராட்சி மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,செப்.18

பருத்தித்துறையில் கடந்த 2ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பாக அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்படுவது மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வைத் தோற்றுவிக்கும் முயற்சி என்று வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது சொந்த மண்ணில் இயல்புநிலையை மீள்விக்கும் பெருவிருப்புடன் வடமராட்சி மாணவர்கள் கடந்த 2ஆம் திகதி பருத்தித்துறையில் ஓர் அமைதி வழிப் போராட்டமொன்றை நடத்தினர். இந்த அமைதிவழிப் போராட்டத்தை இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் வன்முறை வழியில் அடக்க முயற்சித்தனர். இதைத் தொடர்ந்து போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிய அப்பாவிப் பொதுமக்களைக் கைதுசெய்வதன்மூலம் மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வைத் தோற்றுவிக்கப் படையினர் முயற்சி செய்கின்றனர்.

இத்தகைய முயற்சிகளை வடமராட்சி மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்தோடு இத்தகைய நடவடிக்கை தொடரவேண்டாமென்று சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் வேண்டுவதோடு, இத்தகைய நடவடிக்கை தொடருமெனின் நாம் மீண்டும் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டி வரும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஓ-3)

# கட்டுநாயக்கா விமானப் படைமுகாமில் பெண் சிப்பாய்மீது வல்லுறவு முயற்சி!

## அதிகாரியும், நண்பரும் விசாரணையில்

கொழும்பு,செப்.18

கடந்தவாரம் கட்டுநாயக்க விமானப்படை முகாமில் பெண் சிப்பாய்கள் தங்கும் விடுதியில் புகுந்து விமானப் படை பெண் சிப்பாய் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் நோக்கில் கடத்திச்செல்ல முயன்ற அதேமுகாமைச் சேர்ந்த விமானப்படை அதிகாரி மற்றும் கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவர் ஆகியோருக்கு எதிராக விமானப்படை தலைமையகத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 'திவயன' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி முகாமில் சில கட்டட வேலைகள் செய்வதற்கு ஒப்பந்தம் பெற்றிருந்த ஒப்பந்தகாரரொருவர் தமது நெருங்கிய உறவினரான அம்முகாமைச் சேர்ந்த விமானப்படை அதிகாரி ஒருவருடன் சேர்ந்து மதுபானம் அருந்துவதோடு, அம்முகாமைச் சேர்ந்த பெண் சிப்பாய் ஒருவருடன் பலவந்தமாக உறவுகொள்ள பலதடவைகள் முயன்றுவந்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு ஒப்பந்தகாரரும் அதிகாரியும் பெண் சிப்பாய்கள் தங்கும் விடுதியினுள் புகுந்து அங்கு உறங்கிக்கொண்டிருந்த குறிப்பிட்ட பெண் சிப்பாயைக் கடத்திச்செல்ல முயன்றுள்ளனர். அச்சமயம் பெண்சிப்பாய் கூச்சலிடவே அவர்கள் இருவரும் தப்பியோடி விட்டனர்.

இதுதொடர்பான முறைப்பாட்டையடுத்து, அவ்விடுதியைச் சோதனையிட்ட விமானப்படையினர் அங்கு கைவிடப்பட்டிருந்த ஒருசோடி காலணிகளைக் கைப்பற்றியதோடு, சம்பந்தப்பட்ட விமானப்படை அதிகாரியின் அறையையும் சோதனையிட்டனர்.

விமானப்படை பெண் சிப்பாயை சம்பந்தப்பட்ட சந்தேகநபரான விமானப்படை அதிகாரி பயமுறுத்தி, இச்சம்பவம் குறித்த தகவல்கள் எதனையும் வெளியிடக்கூடாது எனத் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஓ)

## கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பொருள்களுக்கு விலை நிர்ணயம்!

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளிலும் பொருள்களின் விலைகள் ஒரேசீராக அமையும் வகையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருள்கள் கப்பல்கள்மூலமே எடுத்துவரப்பட்டன. ஆகையால், ஒவ்வொரு சங்கமும் அவற்றின் பொருளாதாரப் பின்னணியையும், பொருள்களை எடுத்துவர ஏற்பட்ட செலவினங்களையும் கருத்திற்கொண்டு பொருள்களுக்கான விற்பனை விலைகளைத் தீமானிக்க நேரிட்டது.

ஆனால், தற்போது தரைப்பாதை ஊடாகப் பொருள்கள் எடுத்துவரப்படுவதால் கூட்டுறவுச் சங்கங்களின் பொருள்களின் விற்பனை விலைகள் கணிசமான அளவில் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் - எதிர்வரும் காலங்களில் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் பொருள்களின் விற்பனைவிலை ஒரே சீராக அமையும். இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்கொள்ளவுள்ளது.

- இவ்வாறு உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஓ-9)

### நாளை

புரட்டாதி 03
வியாழக்கிழமை
(19.09.2002)
திதி : திரயோதசி
பிற்பகல் 4.38 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் 2.00 வரை.
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம்: 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அதிகம் அறிய, அறிய ஒருவர் அதிகம் அடக்கமாக இருக்க விரும்புகிறார்.

## விடுதலைப் புலிகள் வந்த பின்னர் கசிப்பு உற்பத்தி குறைந்துவிட்டது!

### மதுவரிப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அரசியல் பணிக்காக விடுதலைப் புலிகள் குடாநாட்டுக்கு வந்தபின்னர் குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட மதுவரிப் பொறுப்பதிகாரி என்.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைமுறையில் இருந்த போது பெருமளவில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னர் மாதாந்தம் சராசரி 40இற்கு மேற்பட்ட கசிப்பு வழக்குகள் பதியப்பட்டுள்ளன. ஆனால், தற்போது கசிப்பு உற்பத்தி தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

முன்னைய காலங்களில் அதிகளவு கசிப்பு உற்பத்தி இடம்பெற்ற பகுதிகளில் அவை குறைவடைந்துள்ளன.

அதேவேளை - குருநகர், நாவாந்துறை, கோண்டாவில், ஆனைக்கோட்டை, அல்வாய் மேற்கு மற்றும் துன்னாலை, கொற்றாவத்தை, கம்பர்மலை ஆகிய பகுதிகளில் இப்போதும் கசிப்பு உற்பத்தியில் சிலர் ஈடுபட்டு வருவதாக எமக்குத் தகவல்கள் வந்துள்ளன. அப்பகுதிகளில் தேடுதல் மேற்கொண்டு கசிப்பு உற்பத்தியை ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துவருகின்றோம்.

இப்பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் பலர் கைவிடப்பட்ட வீடுகளை தமது நடவடிக்கைக்குப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் 'மிதிவெடி அபாயம்' என்று எழுதப்பட்ட பலகைகளை அந்த இடங்களில் நட்டுவைத்துப பாதுகாப்புத் தேடிக்கொள்கின்றனர் - என்றார் அவர். (ஓ-ரி)

பழையவீடுகள், தளபாடங்கள், மரவாகனங்கள், பித்தளைச் சாமன்கள் என்பன அரும் பொருட்கள். இவற்றை வர்த்தகப் பொருளாக்குபவர்கள் பற்றி விழிப்புடன் இருப்போம். இவற்றின் தொடர்ந்த இருப்பை உள்ளூரில் உறுதி செய்வோம்.



அரும்பொருட்களும் தொல்பொருட்களும் தேசத்தின் சொத்தும், அதன் வரலாற்றின் அடையாளமும் ஆகும்.

இவற்றை அழிப்பதும், இந்த மண்ணை விட்டு வெளியேற அனுமதிப்பதும், தேசவரலாற்றையும், இனஅடையாளத்தையும் அழிக்கும் செயலாகும்.

முதுசம் Vii, கலைவட்டம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## புனித நீக்கொலார் ஆலயம்
மிருசுவில்

மேற்படி ஆலயத்தைச் சேர்ந்தவர்களுக்கான முக்கிய கூட்டமொன்று எதிர்வரும் (22.09.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தைச் சேர்ந்த அனைவரையும் கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*புனித நீக்கொலார் ஆலயம்,*
*மிருசுவில்.* (8365) - பங்குத்தந்தை.



கூரை அமைப்பில் புதிய அலை
**அன்டன் சுப்பர் ஷெல்ரா**
குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுப்பர் ஷெல்ரா

அன்டன் சுப்பர் ஷெல்ரா
பொருத்துவதற்கு ஏற்றவை!

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
செனற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324281-5, 337283-5 ,பெக்ஸ்: 446554

Super Shelta
உங்களின் கூரைக்குப் பரிகாரம்


## வட்டுக்கோட்டையில் பொலிஸ் நிலையம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் காரைநகர் வீதியில் பொலிஸ் நிலையம் ஒன்று விரைவில் திறக்கப்படவுள்ளது.

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலேயே தங்கள் முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர். (ஒ-29)

## ஆசிரியர் சங்கக் கிளைத் தலைவருக்கு சேவைநலன் பாராட்டு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கோப்பாய்ப் பிரிவு கிளையின் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் சோமு விஸ்வலிங்கத்தின் சேவைநலன் பாராட்டு வைபவமும் பிரிவுபசாரமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அத்தியார் இந்துக கல்லூரியில் தலைவர் எம்.சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளன.

## சேவைக்காலப் பயிற்சி

யாழ்ப்பாணம்.செப்.18

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி ஒன்று இன்று புதன்கிழமையும், நாளை வியாழக் கிழமையும் முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தின் அனுசரணையுடன் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் சேவைக்காலப் பயிற்சியில் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி து.விஜயலட்சுமி, வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் கூட்டுறவுத்துறை அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில கடமையாற்றுகின்ற அனைத்து தொழில்நுட்பவியலாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு உள்ளூராட்சி மன்றங்களின் உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார் (ஒ-ரி)

## யாழ்.குடாநாட்டில் எள்ளு உற்பத்தியை ஊக்குவிக்கத் திட்டம்

மூளாய்,செப்.18

யாழ்.மாவட்டத்தில் எள்ளு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு ஜப்பானிய உதவி நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி நிறுவனம் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அடுத்த வருடம் சிறுபோகத்தின் போது விவசாயிகளை எள்ளு உற்பத்தியில் ஈடுபடுத்தும் நோக்குடன் மேற்படி ஊக்குவிப்புத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி திட்டத்தின் மூலம் மானியம் வழங்கல், கடன் உதவி, உற்பத்திக்கு சந்தைவாய்ப்பு வழங்குதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது. (எ-99)


### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

வடகிழக்கு சுகாதார மேம்பாட்டுக் கழக அனுசரணையுடன்
"மெடி குவிக் பிரைவேட் லிமிட்டெட்"
கொழும்பின உதவி அனுசரணையுடன் நடத்தும்

**இலவச 2 நாள் மருத்துவ முகாம்**
**தாய் சேய் நலநோன்பு சிகிச்சை முகாம்**

இடம் : மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை
காலம் : 21.09.2002 சனிக்கிழமை,
22.09.2002 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை

*சேவையாற்றவுள்ள மருத்துவக்குழு:*
மகப்பேற்று நிபுணர்: டாக்டர் திருமதி G.பவானி அவர்கள்
பொது வைத்திய நிபுணர்: டாக்டர் K.மகேசன் அவர்கள்
மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை சிரேஷ்ட வைத்தியர்களும் இவ் இலவச 2 நாள் முகாமில் சேவையாற்றுவார்கள்.

☆ மேற்படி முகாமில்:
- 21.09.2002 பொது மருத்துவ பரிசோதனைகளும், சிகிச்சையும்
- 22.09.2002 பொது மருத்துவ பரிசோதனைகளும், மகப்பேற்று பெண் நோயியல், தாய், சேய் நலநோன்பு பரிசோதனைகளும், சிகிச்சைகளும் இலசவசமாக மேற்கொள்ளப்படும்.

☆ பயன்பெற விரும்புபவர்கள் 20.09.2002 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு முன் மேற்படி வைத்தியசாலையில் முன்கூட்டியே பதிவுசெய்து பயன்பெறும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

*மூளாய்,*
*சுழிபுரம்.*
*தலைவர்:*
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்.

விளம்பர அன்பளிப்பு: *"மக்கள் சேவை மகேசன் சேவை"*
சி.சச்சிதானந்தன், *உரிமையாளர்*
சச்சியா இரும்பகம் வட்டுக்கோட்டை. (8389)



# சுடர் ஒளி

விலை 14/-

17-09-2002 இதழில்

- குடாநாட்டைக் கலக்கும் வெள்ளைவான் பீதி: உண்மைநிலை தெரியாது பெற்றோர் குழப்பம்.
- பெரும் எதிர்பார்ப்புகளுடன் தாய்லாந்தில் பேச்சு ஆரம்பம் இலங்கையில் அரசியல் நெருக்கடி உச்சம்
- திருமலையைத் தனிமைப்படுத்தும் மற்றும் ஒரு திட்டம் அரங்கேற்றம்!
- புத்திசாலிகள் என்று பெயரெடுத்தவை வதந்திகளை நம்பி விடுவினம் - *தேரடி*
- மாறாத வடுவை ஏற்படுத்திய மட்டக்களப்பு படுகொலைகள் 12 வருடங்கள் கடந்த நிலையிலும் மறக்கமுடியாத பயங்கரம்
- நெருக்கடிகளைச் சந்தித்த கிளிநொச்சி மருத்துவமனை
- மனித பூதம் மேரி ஆன் - *க்ரைம் டயரி*
- ஈழவேந்தனின் வரலாற்றுத் தொடர்
- வல்லிபுரம் ஆழ்வார் தேர் உற்சவச் சிறப்பிதழ்
- மற்றும் சிறுகதை, குறுங்கதை, விளையாட்டு, சித்திரத் தொடர்கதை, அலைகள் தொடர்காவியம், சிறுவர் பகுதி, சினிமா, இணையத்தளத்தில் இருந்து உட்பட பல்வேறு விசேட அம்சங்கள்.




(சி.23841)

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!

# முல்லைத்தீவில் மீள் குடியேறும் முஸ்லிம்களுக்கு உதவக் கோரிக்கை

1987ஆம் ஆண்டிலும் 1990ஆம் ஆண்டிலும் இரண்டு முறை இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் அகதிமுகாம்களில் பல கஷ்டங்களை அனுபவித்த முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்கள் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்று சுயவிருப்பத்தின்பேரில் தமது சொந்தக் கிராமங்களில் மீள்குடியேறி வருகிறார்கள்.

மீள்குடியேறிய முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம் மக்கள் காணிகளைத் துப்புரவு செய்வதற்கும் தற்காலிக வீடுகளை அமைப்பதற்கும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்குடன் வன்னிப் புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சரிடம் உதவிகோரி அண்மையில் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் குடியேறிய அல்லது மீள்குடியேற்றம் செய்ய ஆயத்தம் செய்யும் முசலி பிரதேச மக்களுக்கு வன்னி புனர்வாழ்வு அமைச்சு ஆரம்ப உதவிகளைச் செய்திருக்கிறது. அதேபோன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கும், ஆரம்ப முதல்கட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ள வன்னி புனர்வாழ்வுக்கு உதவும் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மீள்குடியேறிய முல்லை மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

புத்தளம் மாவட்டத்தில் வாழும் அகதிகளுக்கு கடந்த 12 வருடங்களாக பல கஷ்டங்களுக்கு மத்தியில் பல உதவிகளை பல கோணங்களில் மேற்கொண்டு வருகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள் இதுபோல் இதர அமைப்புக்களும் சுயவிருப்பத்தின் பேரில் மீள்குடியேறிய முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கும் உதவவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ)

## நோயாளிகள் சிரமம்

தென்மராட்சி,செப்.18

மிருசுவில் மத்திய மருந்தகம் தற்போது பிற்பகலில் இயங்கிவருவதால் பளைப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளையில் இன்னமும் ஆஸ்பத்திரி மீள இயங்காததால் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது மருத்துவத் தேவைகளுக்காக ஏ-9 வீதியில் உள்ள மிருசுவில் ஆஸ்பத்திரிக்கே வந்து செல்கின்றனர்.

தற்போது வரணி மத்திய மருந்தகத்தில் கடமையாற்றும் மருத்துவர் பிற்பகல் வேளையில் மிருசுவில் மத்திய மருந்தகத்திலும் கடமையாற்றுவதால் பளைப் பகுதியிலிருந்து இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் மணிக்கணக்கில் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் மத்திய மருந்தகத்தில் கடமையாற்றிய டாக்டர் ச.அம்பிகைபாலன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## ரெலிகொமில் முறைப்பாடு

யாழ்.வண்ணார்பண்ணைப் பகுதியில் வசிக்கும் கல்வி அதிகாரி ஒருவர் தனக்குச் சொந்தமான தொலைபேசி இணைப்பை தட்டாதெருப் பகுதியில் இயங்கும் தனியார் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தி வருவதாக யாழ்ரெலிகொமில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், அவர் ரெலிகொம் நிறுவனத்தைக் கேட்டுள்ளார் எனக் கூறப்பட்டது. (எ)

## பரிசுத்தினம்

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஷ்த மிஷன் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசுத்தினம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

# இலங்கைப் பிரச்சினை பற்றி பீரிஸ், உருத்திரகுமாரன் பேச்சு!

## சுவிற்சர்லாந்தில் அண்மையில் இடம்பெற்றது

கொழும்பு,செப்.18

தாய்லாந்தில் ஆரம்பமாகியுள்ள பேச்சுக்களில் அரசுப் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் புலிகளின் பிரதிநிதியாகப் பங்குபற்றும் சட்டவல்லுநர் வீ.உருத்ரகுமாரனும், சுவிற்சர்லாந்தில் ஏற்கனவே சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

சுவிற்சர்லாந்தில் அண்மையில் சர்வதேச கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் யூகோஸ்லாவிய ஜனாதிபதி, மாலைதீவு ஜனாதிபதி, கனடியப் பிரதமர், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர், நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு இலங்கைப் பிரச்சினை பற்றி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சரித்த ரத்வத்த, அஜித் கபரால், சரத் அமுனுகம, றொகான் எதிரிசிங்க ஆகியோரும் சட்டவல்லுநர் ஆர்.உருத்ரகுமாரனும் பேசியிருந்தனர். அங்கு பேசிய அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் - 'இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவகையில் எந்தவிதமான அதிகாரப் பகிர்வுக்கும் அரசு தயாராக உள்ளது' என்றார்.

சட்டவல்லுநர் உருத்ரகுமாரன் பேசுகையில்:- 'தாய்லாந்தில் இடம்பெறும் முதற்கட்டப் பேச்சுக்களில் முக்கிய விடயங்கள் எவையும் ஆராயப்படமாட்டா. ஆனால், கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினை பற்றிப் பேசப்படலாம்' என்றார். (ஒ)

# மூவின இளைஞரின் ஒற்றுமையே சமாதானத்தை ஏற்படுத்தும்!

## நோர்வேப் பிரதிநிதி பேச்சு

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் தமிழ் - முஸ்லிம்- சிங்கள இளைஞர்களின் உள்ளங்களில் முதலில் ஒற்றுமை உணரப்படவேண்டும்.

- இவ்வாறு சம்மாந்துறை - வீரமுனை இளைஞர் சமாதான அமைப்பின் 'பிரதேசங்களுக்கிடையில் சமாதானம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்ற நிகழ்வில் உரையாற்றும்போது நோர்வே நாட்டின் பிரதிநிதி நியூட்டன் ஜோன் தெரிவித்தார்.

இந்நிகழ்வு சம்மாந்துறை ஈ.பி.எஸ். நிறுவன தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 100இற்கும் மேற்பட்ட தமிழ்-முஸ்லிம் இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய- நட்புறவு அமைப்பின் செயலாளர் எம்.வை.எம்றாபி தலைமையுரையில்- அரசியல் வாதிகளினால்தான் சமாதானம் சீர்கெடுகிறது.

இவர்களின் அரசியல் காய்நகர்த்தலுக்காக பிரதேசங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் வேண்டுமென்றே திட்டமிட்டு, சதி வேலைகளில் ஈடுபட்டு சமாதானத்தினை நிலைகுலைய வைக்கின்றனர். இவர்களை சமூகம் இனங்காணத் தவறின் எம்போன்ற இளைஞர்கள் அவர்களை உடன் இனங்கண்டு தகுந்த பாடம் புகட்டவேண்டும் - என்றார். (ஒ)

# 19ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் ஐ.தே.மு.அரசின் கபட நடவடிக்கை!

## பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துக்கு தான் வழங்கிய உறுதிமொழிகளினால் ஏற்படக்கூடிய பின் பாதகமான விளைவுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் ஒரு முயற்சியாகவே ஐ.தே.மு.அரசு 19ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறது.

சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரான பட்டி வீரக்கோன் அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

நவம்பர் மாதத்தில் கொண்டுவரப்படும் வரவு-செலவுத் திட்டத்துக்கு முன் இத்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரவேண்டும் என்ற தனது நோக்கத்தை அரசாங்கம் அறிவித்திருப்பது ஒரு கெட்ட சகுனமாகும். வரவு - செலவு திட்ட பற்றாக்குறையைச் சமாளிக்க சொத்துக்கள் விற்பனை மூலம் 2,900 கோடி ரூபாவை அரசாங்கம் திரட்ட வேண்டியிருக்கிறது.

சில்லறை வர்த்தகத்துக்கும் வற்வரியை அறிமுகப்படுத்துவது புதிய வரவு-செலவுத் திட்டத்தில் வரவிருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது 19ஆவது திருத்தச் சட்டம் அரசின் கபட நடவடிக்கை என்றே சமசமாஜக் கட்சி கருதுகிறது. எனவே இத்திருத்தச் சட்டத்தை தங்களின் பிரதி நிதிகள் ஆதரிக்காதிருப்பதை மக்கள் உறுதிப்படுத்தவேண்டும் என்று சமசமாஜக் கட்சி கோருகிறது.

- இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (ஒ)

# ஒருவர் பதவிக்கு மற்றவரால் ஆபத்து! அதனால் தொடருகிறது இழுபறி நிலை

## பிரதமரின் சமாதான சகவாழ்வுத் திட்டம் வெற்றி தருமா?

ஐ.தே.மு. அரசு தனது ஆயுள் காலத்தைக் காப்பாற்றுவதற்காக ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டிய தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்தினுள் மூழ்கிப் போயுள்ளது.

கட்சியின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். தீர்க்கதரிசனத்துடன் பரிதாப நிலையை முன்னரே எண்ணிப் பார்க்காமல் இருந்துவிட்டாரே என்று ஐ.தே.கவினர் பலர் மனம் புழுங்கியபடி இருப்பர் எனலாம்.

முக்கியமான அதிகாரங்களை எல்லாம் ஒரு கைக்குள் அகப்படுத்திக் கொண்டுவிட்டதாக அன்று புளகாங்கிதம் அடைந்திருப்பார் ஜே.ஆர்.ஜயவர்த்தன.

ஆனால், அவருடைய ஆவி தனது வாரிசுகள் இன்று நிறைவேற்று அதிகாரத்தின் இரும்புக்கரங்களுக்குள் அகப்பட்ட நசிந்து நொறுங்கும் காட்சியைப் பரிதாபத்துடன் நோக்கக்கூடும்.

நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதுமுதல் அதனைக் கலைத்துவிடுவது வரை -

ஓர் அமைச்சரை நியமிப்பது முதல் அவரை விலக்குவதுவரை -

பிரதமரையே நியமிப்பதுமுதல் அவரை விலக்கிவிடுவதுவரை -

- இவை போன்ற எல்லா அதிகாரங்களையும் தன்னுடன் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் அரசியல் எதிரியான ஜனாதிபதியின் கைகளில் கொடுத்துவிட்டு 'சிவனே' என்று அரசு நடத்தப் புறப்பட்டதில் பிரதமர் எதிர்கொண்டுவரும் ஆபத்துக்கள் இன்றைய ஊடகங்களை அலங்கரித்து வருகின்றன.

பதவிப் போட்டியை நல்ல சொல் அலங்காரங்களுக்குள் புகுத்தி நடத்தப்படும் அசிங்கங்களை முழு உலகுக்குமே எமது ஊடகங்கள் பறைசாற்றிக்கொள்கின்றன.

### சமாதான சக வாழ்வு

இவை தேர்தலுக்கு முன்னரே எதிர்நோக்கப்பட்டவைதான். அத்தகைய நிலையில் 'சமாதான சக வாழ்வு' என்னும் மந்திரக்கோலையும் உரிய வேளையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏந்திப் பிடிக்கத் தவறியதில்லை.

ஆனால், நிச்சயமான அனுகூலங்களை அதன்மூலம் அவர் அடைய முடியவில்லை. மக்கள் ஆணை என்னும் துரும்புச் சீட்டினால்மட்டுமே வெளிப்படையான வெற்றிகள் சிலவற்றை ஐ.தே.மு. அரசினால் அடைய முடிந்தது.

ஆனால் 'சமாதான சக வாழ்வு' அடியோடு தோல்வி கண்டதுடன் - 'அதனை ஏற்கத் தான் தயாரில்லை' என்று இறுதியில் ஜனாதிபதி அறிவித்துவிட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி, டிசெம்பர் 5ஆம் திகதி வரும்வரை இலவுகாத்த கிளியாக இருந்து வருகிறது என்பதே உண்மை.

அதுபோலவே ஐ.தே.மு. அரசும் வரலாற்று சாதனையாகக் கருதக்கூடிய சமாதான நடவடிக்கையையும், அதனைச் சூழக் கட்டியெழுப்பப்பட்டு வரும் சர்வதேச ஆதரவையும் முற்று முழுதாக நம்பிக்கொண்டு இருக்கிறது.

'சமாதான சக வாழ்வு' என்ற சுலோகத்தை உச்சரித்துக்கொண்டு தனது ஆயுளைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்துக்கொண்டும் இருக்கிறது.

ஜனாதிபதி ஒருபுறம், தனது அதிகாரங்களை வரிசைப்படுத்தி கனகச்சிதமாக வெளியிடுகிறார். மறுபுறம் அவற்றை வளமாக மறுதலிப்பதுடன் புதிதாக அரசியற்சட்ட ரீதியான மிரட்டல்களை ஐ.தே.மு. சார்பில் அமைச்சர் ஜீஎல்.பீரிஸ் வெளியிடுகிறார்.

இந்தக் கயிறிழுப்பு டிசெம்பர் 5ஆம் திகதி நெருங்க நெருங்க மாற்றங்கண்டு வருகிறது.

தீவிரம் பெற்று வெடிக்கும் நிலைக்கு முற்றிவருகிறது. இறுதி ஆயுதங்கள் இரு பக்கங்களிலும் தயார். இராம பாணங்கள் எந்நேரமும் ஏவப்படலாம்.

ஐ.தே.மு. அரசு அமைக்கப்பட்ட கணத்திலிருந்தே ஒருவரின் பதவியை மற்றவர் பறிக்கும் ஆபத்துக்கள் மேற்கொள்ளப்பட்டன; ஆயுதங்கள் தூக்கப்பட்டன.

ஜனாதிபதிக்கு எதிராக அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றுவது என்று முழுமூச்சுடன் அலுவல்கள் நடந்தன. ஆயினும் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

ஆடம்பரக் கார்களின் இறக்குமதியும் அதில் கோடிக்கணக்கான ரூபா ஊழலும் நடந்திருப்பதாக பெரும் எதிரும் புதிருமான பிரசாரங்கள் பூதாகாரமாக எழுந்தன. பின்னர் அவையும் அடங்கின.

ஜனாதிபதியின் கைப்பைக்குள்

**- கலைவாணன் -**

உளவுக் கமரா விவகாரம் குண்டுப் புரளியினுள் அடங்கி அமிழ்ந்துபோனது.

நாடாளுமன்றம் பதவியேற்ற ஒரு ஆண்டு முடிந்ததும் டிசெம்பர் 5ஆம் திகதியுடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவார். அதனை முந்திக்கொண்டு நாம் அவரிடமுள்ள நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பறித்துவிடலாம் என்று ஆரவாரிக்கப்பட்டது.

### தொடரும் இழுபறிநிலை

இவ்விடயத்தில்தான் இன்றைய இழுபறி நடந்து கொண்டிருக்கிறது. 2000ஆம் ஆண்டில் ஒரு தேர்தலையும் 2001இல் இன்னுமொரு தேர்தலையும் சந்தித்த எம்.பிக்கள் 2002இல் அடுத்த தேர்தலையும் சந்திக்க வேண்டியேற்படும் பரிதாபநிலை ஐ.தே.முக்கு, கைகொடுத்து உற்சாகமூட்டும் தன்மை கொண்டதாக இருக்கிறது.

இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடைவதற்கு ஐ.தே.மு. அரசு வழிமேல் விழிவைத்துக் காத்து நிற்கிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினர் திடீர்த்தேர்தலை விரும்பவில்லை. 'மனச்சாட்சிப்படி வாக்கு' அளிப்பதன் மூலம் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்காமல் தடுக்கலாம். அதன்மூலம் தத்தமது பதவிகளை மேலும் சில காலத்துக்குக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று எம்.பிக்களுக்கு நாவில் நீரூறத் தொடங்கியது. அதனால் பொ.ஐ.மு. தலைமைக்கு அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிவிட்டது போலாயிற்று.

பொ.ஐ.முக்குள் ஏற்கனவேயிருந்த குழுக்களுக்கிடையேயான பகைமை, பதவிப்போட்டிகளுடன் எம்.பிக்களின் அமைதியின்மையும் சேர்ந்துகொண்டது. மனச்சாட்சிப்படி அவர்கள் வாக்களித்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு பெறுவது சுலபம் என்பது மேல்மட்டங்களால் உணரப்பட்டது. பாம்பின் கால் பாம்பு அறியுமே!

லக்ஷ்மன் கதிர்காமரின் சமரசத்துடன் மூன்று வருடங்களுக்கு நாடாளுமன்றத்தைக் கலைப்பதில்லை என்ற அறிவிப்பை ஜனாதிபதி சபாநாயகருக்குத் தெரிவித்தார். பலபடிகள இறங்கிவந்த ஒரு நிலை இது என்பதுடன் ஜனாதிபதியின் பதவிக்குரிய மதிப்பு நிலைபற்றியும் பலவாகப் பேசப்படும் நிலை ஏற்பட்டது.

ஆயினும், விவகாரம் தீர்ந்தபாடில்லை. ஜனாதிபதியின் வாக்குறுதிகளின் நம்பகத்தன்மை குறித்து ஐயப்பாடு எழுந்தது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியை 1995 ஜூலைக்கு முன்னர் ஒழிப்பதென்று 1994 ஜனாதிபதித் தேர்தலின்போது ஜே.வி.பிக்குக் கொடுத்த எழுத்துமூல வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

### லியாம் பொக்ஸ் உடன்பாடு

லியாம் பொக்ஸ் உடன்பாடு தொடர்பாக இன்றைய பிரதமருக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்குமிடையே கடிதங்கள் பரிமாறப்பட்டன. அவற்றில ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த விடயங்களில் சந்திரிகாவின் பங்கு நிறைவேற்றப்படவில்லை.

2001இல் நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேனென்று பொ.ஐ.மு. எம்.பிக்களுக்கே வாக்குறுதியளித்து விட்டுப் பின்னர் ஜனாதிபதி பின்வாங்கினார்.

இதுபற்றி முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்பிள்ளை தெரிவித்தகூற்று ஜனாதிபதியின் வாக்குறுதிகளின் பெறுமதியைக் குறைத்துவிட்டது.

இந்நிலையிலேயே, விட்டேனா பார்! 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று ஐ.தே.மு. தலைமை வீறிட்டு எழுந்து நிற்கிறது.

அதேவேளை, அது நிறைவேறுவதை இயன்றவரையும் தடுத்தே நிறுத்துவது என்று ஜனாதிபதியும் கங்கணங்கட்டி நிற்கிறார்.

இதன் எதிரொலியாக வரவிருக்கும் சில வாரங்கள் உணர்வுபூர்வமான பல்சுவை விருந்துகளை மக்களுக்கு அளிக்கலாம். எவ்வாறாயினும், பாதிக்கப்படப்போவது சமாதான முயற்சிகளே. (வ)

# யாழ்.குடாநாட்டில் உள்ள லயன்ஸ் கழகங்களின் சார்பில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள கண்சிகிச்சைப் பிரிவுக்கு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிறுவனத்தினால் (L.C.I.F.) உபகரணங்களும், நடமாடும் வைத்திய சோதனை வாகனமும்

# அன்பளிப்பு




செயற்றிட்டத்திற்குப் பொறுப்பாளராக அன்றைய மாவட்ட ஆளுநர் லயன் றொகித்த உடவத்த அவர்கள் உபகரணங்களை வைத்திய கலாநிதி குகதாசன் அவர்களுக்கு 20.03.2001அன்று அன்பளிப்புச் செய்கின்றார்.




செயற்றிட்டத்திற்குப் பொறுப்பாளரான, அன்றைய மாவட்ட ஆளுநர் 20.03.2001 அன்று உபகரண அன்பளிப்புக்குப் பின்னர் அங்கு சமூகந்தந்தவர்கள் மத்தியில் உரையாற்றுகின்றார்.

We Serve




முப்பது லட்சம் ரூபா பெறுமதியுள்ள நடமாடும் கண்பரிசோதனை வாகனம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

We Serve

1995ஆம் ஆண்டு லயன்ஸ் சிவபாதசுந்தரம் மாவட்ட ஆளுநராக இருந்த காலத்தில் நல்லூர் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் இராமகிருஷ்ணன் அவர்கள் சமர்ப்பித்த மேற்கூறிய உதவி வழங்கப்படவேண்டும் என பிரேரணை ஏற்கப்பட்டது. அப்பிரேரணைக்கேற்ப சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த திரு.கா.வே.முத்துக்குமாரசுவாமி அவர்கள் செயற்றிட்டத் தலைவராக நியமிக்கப்பட்டார். வைத்திய கலாநிதி ரெஜி பெரேரா அவர்களின் உதவியோடும் வைத்திய கலாநிதி குகதாசன் அவர்களின் ஆலோசனையுடனும் இத்திட்டம் தயாரிக்கப்பட்டு, சர்வதேச லயன்ஸ் கழகத்திற்கு அனுப்பப்பட்டது. இக்காலத்தில் யாழ்.குடாநாட்டில் நிலவிய சீரற்ற நிலைமையால் இத்திட்டத்திற்கு அனுமதி பெறத் தாமதம் ஏற்பட்டது. இறுதியாக லயன் மலிக்கசபீர் மாவட்ட ஆளுநராக இருந்த காலத்தில் 1999ஆம் ஆண்டு இத்திட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு லட்சத்து முப்பத்து மூவாயிரம் அமெரிக்கன் டொலர் (12,000,000/= இலங்கை ரூபா) ஒதுக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக 20.03.2001ஆம் ஆண்டு அன்று ஒரு தொகை உபகரணங்கள் அப்பொழுது இந்தச் செயற்றிட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள லயன் றொகித்த உடவத்தவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அதன் பின் வேறுசில உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டு 17.09.2002 அன்று இன்னும் சில உபகரணங்களும், நடமாடும் கண் பரிசோதனை வாகனமும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இது அன்பளிப்புச் செய்யப்பட்டபோது 97, 98 காலப்பகுதியில் இருந்த மாவட்ட ஆளுநர் லயன் தில்லைநாதன் அவர்களும் பிரசன்னமாகி இருந்தார்.

அண்மையில் பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு வந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை மேற்கொண்ட வைத்திய கலாநிதியால் சிபார்சு செய்யப்பட்ட வேறு உபகரணங்களும் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் அனுமதி பெறப்பட்டு அன்பளிப்புச் செய்ய எத்தனிக்கப்படுகின்றது.

1995ஆம் ஆண்டுவரை இரண்டு கண் வைத்திய கலாநிதிகளால் யாழ். போதனா வைத்தியசாலையில் தொளாயிரம் (900) கண் வெண்பூ அகற்றல் (கற்றாக்ட்) சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடத்தில் அதாவது 31.08.2002வரை ஒரு வைத்திய கலாநிதியினால் ஆயிரத்து நானூற்று நாற்பத்தி நான்கு பேருக்கு கண் வெண்பூ அகற்றல் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இது யாழ்.மாவட்ட மக்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். நடமாடும் கண் பரிசோதனை வாகனம் சேவையில் ஈடுபடுத்தத் தொடங்கிய பின் யாழ்., கிளிநொச்சி மக்களுக்கு இன்னும் திறம்படச் சேவையாற்ற முடியும். (சி-23859)

**சேவை மனப்பான்மையுள்ள பெரியோர்களே! தாய்மார்களே!**
**உங்கள் பகுதியிலுள்ள அரிமா (லயன்ஸ் கழகம்) கழகத்தில் சேருங்கள்.**
**வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்களுக்குச் சேவைசெய்ய வாருங்கள்.**

## தியாகத் திருவுருவே.....



## புனிதப் பொழுதுக்காய்...

உனது சுவாசங்கள்.... சுவடுகள் தெரியாமல்
புதைந்து போனாலும்....
உணர்வின் உறுமல்கள்
விண்தாண்டி விரைகின்றன....
இந்தத் தேசத்தினால் புரிந்துகொள்ளப்பட்ட.....
உனது ஆத்மாவின் தரிசனங்கள்
இன்று உயிர்பெறும் தேச மலர்விற்காய்....
காத்திருக்கின்றன
அந்தப் புனிதப் பொழுதிற்காய்
எங்கள் விழிகள் விரிகின்றன.

ப.யாழ்மொழி
*கிளிநொச்சி.*

## தேசத்தின் தீபம் திலீபன்

விழிக்குள் நெருப்பை விதைத்தான்
விடியலுக்கு உடலைக் கரைத்தான்
தமிழ்நிலம் முழைக்கக் கதைத்தான்
தனிவளம் செழிக்க வியர்த்தான்.

மக்கள் புரட்சிக்கு வித்திட்டான்
மலர்குலச் சிரிப்பை முத்தமிட்டான்.
திக்குகள் வாழ்த்திட மறைந்தான்.
திரைகள் விலகிட நிறைந்தான்.

அகரங்கள் தோன்றிட உழைத்தான்
அமிழ்தங்கள் கடைந்திட அலைந்தான்
சிகரங்கள் உயர்ந்திட விரைந்தான்
செந்தமிழ் ஓங்கிட கரைந்தான்.

- தமிழீழக் கவிராயர்.

# பட்டயச் சான்றிதழ் பெறுவதில் அலைக்கழியும் மாணவர்கள்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்று சித்திபெறும் மாணவர்கள் தமது பட்டம், பரீட்சைப் பெறுபேறை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக மாணவர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரிகளில் பல்வேறு கற்கை நெறிகளில் கல்வி கற்று, சித்திபெறும் மாணவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பரீட்சைப் பெறுபேற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை வழங்குவது வழமையாகும்.

- இவ்வாறு பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதிலேயே யாழ். மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக 1994ஆம் ஆண்டும் அதன் பின்னரும் நடத்தப்பட்ட வியாபாரக் கற்கையிலான தேசிய டிப்ளோமா, உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா முதலிய பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக்குரிய சான்றிதழ்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தனது 2002.07.11ஆம் திகதி கடிதத்தின் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அறிவித்துள்ளார்.

நீண்டகாலமாக சான்றிதழை எதிர்பார்த்திருந்த மாணவர்கள் பரீட்சை ஆணையாளரின் கடிதம் கிடைத்ததும் தாம் கல்விகற்ற கொக்குவிலில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்றதாகவும் -

சான்றிதழ்கள் கல்லூரிக்குக் கிடைக்கப்பெறவில்லை எனக் கூறி அங்குள்ள உத்தியோகத்தர்களால் பரீட்சார்த்திகள் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இரண்டு மாதங்கள் கழிந்த நிலையில் மேற்படி சான்றிதழைப் பெறுவதற்காக கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரிக்குச் சென்ற மாணவர்களை அங்குள்ள உத்தியோகத்தர்கள் திருநெல்வேலியில் இயங்கும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குச் சென்று சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறிவிட்டனர்.

இதற்கிடையில் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் உத்தியோகத்தர்களோ தமக்கும் சான்றிதழ்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனக் கூறுவதுடன், கொக்குவிலில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று சான்றிதழ்களைப் பெறுமாறு மாணவர்களை திசை திருப்பி விடுகின்றனர்.

இதனால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் செய்வதறியாது உள்ளனர் எனக் கூறப்பட்டது.

இதுகுறித்து தொழில்நுட்பக் கல்லூரிகளில் வலயம் நான்கின் பிரதிப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

## ஏ.ரி.353 ரக விதைநெல் யாழ். எடுத்துவரப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கென சிபார்சு செய்யப்பட்ட ஏ.ரி.353 இன நெல் 500 புசல்கள் கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ். குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

ஏ.ரி.353 விதைநெல்லுக்கு விண்ணப்பித்த விவசாயிகள் அனைவரும் அடுத்த சில தினங்களில் தமக்குத் தேவையான விதை நெல்லை தத்தமது கமநல கேந்திர நிலையங்களூடாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை -

ஏ.ரி.402 மற்றும் பி.ஜி.500 ஆகிய விதை நெல்லினங்களை இப்போது பெற்றுகொள்ளமுடியாத நிலை உள்ளது. இவற்றுக்கு யாழ்.குடாநாட்டில் பெருமளவு விவசாயிகள் விண்ணப்பித்திருந்தனர்.

இந்த இனங்களுக்குப் பதிலாக ஏ.ரி.353 விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் தமது பகுதி கமநல கேந்திர நிலையங்களூடாக தமது பதிவுகளை மீள் பரிசீலனை செய்வதன் மூலம் தேவைப்படும் விதை நெல்லை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

## நியாப் திட்டத்தின்கீழ் கமநல சேவைத் திணைக்களத்தின் குளப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.17

நியாப் திட்டத்தின் கீழ் கமநல சேவைகள் திணைக்களத்தினால் குளங்கள் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பொன்னாலைப் பெரியகுளம், வரணி தம்பனைக்குளம், கப்பூது நெடுங்கிராய் குளம், வல்லிபுரக் குளம் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இவற்றைவிட வேலணைப் பெரிய குளம், செம்மணிப் பெரியகுளம், நவாலி வேடுவன் கண்டிக்குளம் ஆகியவற்றின புனரமைப்பு வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்குளங்களின் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு அப்பகுதி விவசாய சம்மேளனங்கள் மற்றும் நீர்நிலைப் பங்காளிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கேட்டுள்ளார்.

இதேவேளை-

நியாப் திட்டத்தின் கீழ விவசாய வீதி திருத்தம், பொதுக்கட்டடம் அமைத்தல், ஜீவனோபாயக் கடன் திட்டம், குடிதண்ணீர்க் கிணறு அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கென சமூக வலுவூட்டாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் தமது பணிகளை அந்தந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கவுள்ளனர். இவர்களுடன் தொடர்புகொண்டு இத்திட்டத்தின் கீழான கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த விவசாய சம்மேளனங்கள் மற்றும் அங்கத்தவர்கள் முன்வரவேண்டும் எனவும் உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (ஒ-8)

## வரணி ம.வி.க்கு ஒலிபெருக்கிசாதனம் அன்பளிப்பு

தென்மராட்சி,செப்.18

வரணி மகா வித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வித்தியாலயத்தின் பழைய மாணவரும், தொழிலதிபருமான கே.சுப்பிரமணியம் வித்தியாலய அதிபர் ந.நவரத்தினராசாவிடம் இந்த சாதனங்களைக் கையளித்துள்ளார்.

இதேவேளை -

மேற்படி பாடசாலையில் ஒளிப்பதிவு ஒலிப்பதிவுகளுக்கென ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் அறை ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்கான நிதியை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

(எ-117)

# யாழ்.மருத்துவபீட இட ஒதுக்கீடுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

யாழ். மருத்துவபீடம் தவிர்ந்த ஏனைய மருத்துவபீட மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு வருடந்தோறும் அதிகரிக்கப்பட்டு வந்தவேளையில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இட ஒதுக்கீடுகள் 130இலிருந்து 100 ஆகக் குறைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டன. ஆயினும், ஆண்டுதோறும் சுமார் 30 வகையான வெற்றிடங்கள் கடந்த சில வருடங்களாக யாழ்மருத்துவபீடத்தில் காணப்பட்டன. சென்ற ஆண்டில் இவ்வெற்றிடங்களை வடக்கு, கிழக்கு மாணவர்கள் மூலம் நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு யாழ்பல்கலைக்கழக நிர்வாகம் ஒத்துழைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டில் இருந்தாவது அவ்வெற்றிடங்களை வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மாணவர்கள் மூலம் திறமை அடிப்படையில் நிரப்புவதற்குத் தற்போது தமிழ்க் கல்விமான்கள் எடுத்த முயற்சிக்கு எதிராக எச்சரிக்கை வேட்டொன்று தீர்க்கப்பட்டுள்ளது. அதாவது வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழகங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் சிங்கள மாணவரையும் அனுமதிப்பது என்று கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமே(14.09.2002 உதயன் செய்தி) அந்த எச்சரிக்கை வேட்டாகும். இந்த அமைச்சரவைத் தீர்மானத்தின்மூலம் யாழ்மருத்துவபீடத்தில் காணப்படும் வெற்றிடங்களை சிங்கள மாணவர்களைக்கொண்டு நிரப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையானது முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே தரப்படுதல் நடவடிக்கைமூலம் ஆரம்பிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இதனால், வருடந்தோறும் சராசரியாக 50 பேர் மருத்துவபீடத்திற்கும் 50 பேர் பொறியியல் பீடத்திற்கும் அனுமதிக்கப்படுவது தடுக்கப்பட்டது. 30 வருடங்களாகத் தொடரும் இந்த நடவடிக்கையால் இதுவரை சுமார் 1,500 மருத்துவர்களும் சுமார் 1,500 பொறியியலாளர்களும் தமிழ் மாணவர்களிலிருந்து உருவாக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இன்று புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கும் அளவிடமுடியாத அழிவுகளுக்கும் மூலகாரணமே 70களின் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறைதான் என்று கூறினால் அது மிகையாகாது. யாழ் மருத்துவபீடத்தில் வெற்றிடமாகவுள்ள இடங்களை வடக்கு - கிழக்கில் வதியும் மாணவர்களைக் கொண்டு நிரப்பும் தமிழ்க் கல்விமான்களின் முயற்சிக்கு அமைச்சரவைத் தீர்மானத்தின்மூலம் மீண்டு ஒரு தடவை பலத்த அடி விழுந்துள்ளது. வடக்கு-கிழக்கு பல்கலைக்கழகங்களில் சிங்கள மாணவர்களை அனுமதிக்கும் விடயமானது வெளிப்பார்வைக்கு தேசிய ஒற்றுமையைப் பேணும் திட்டம்போலத் தோற்றமளித்தாலும் இது தமிழ் மாணவர்கள்மீது இழைக்கப்படும் மற்றுமொரு சதித்திடமேயாகும். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கல்விமான்களும் அரசியல் வாதிகளும பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்களும் திட்டமிட்டு வகுத்துக் கொடுத்த சதித்திட்ட அழுத்தத்தின் விளைவே மேற்படி அமைச்சரவைத் தீர்மானம் எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. இலங்கை யின் முதற்பிரதமர் டிஎஸ் சேனநாயக்கா அவர்களின் கபடத்திட்டமான கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின்மூலம் தமிழ் மாவட்டமான அம்பாறை, இன்று சிங்கள மாவட்டமாக மாற்றம்பெற்று திகாமடுல்ல மாவட்டமாக மாறியுள்ளதை தமிழ் மக்கள் ஞாபகப்படுத்துதல் இந்த நேரத்தில் பொருத்தமானதாக அமையும். இவ்வாறே திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் காரணமாக சேருவில என்ற தேர்தல் தொகுதி சிங்கள மககளுக்காக அமைக்கப்பட்டதையும் தற்போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மககளின் விகிதாசாரம் குறைவடைந்துள்ளதையும் மறந்துவிடமுடியாது.

70களின் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறையானது அதற்கு முந்திய காலங்களின் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியைக் கட்டுப்படுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட கபடத் திட்டமேயாகும். அவைகளை ஒத்த செயற்பாடே கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின்மூலம் யாழ்.மருத்துவபீடத்தில் வெற்றிடங்களாயுள்ள இடங்களுக்கு சிங்கள மாணவர்களை அனுமதிக்கமுடியும். எனவே யாழ்மருத்துவ பீடத்தில் வெற்றிடங்களாயுள்ள இடங்களுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பேசும மாணவர்களை (முஸ்லிம் மாணவர் உட்பட) அனுமதிக்கும் தமிழ்க் கல்விமான்களின் முயற்சிக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.

எனவே, வடக்கு - கிழக்கு மாணவர்களின் எதிர்காலத்தின் மீது அக்கறையுள்ள கல்விமான்களும் அரசியல் தலைவர்களும் நாளைய நிர்வாகத்தைப் பொறுப்பேற்கவிருக்கும் இளம் சந்ததியினரும் பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்த எத்தனிப்பது பொருத்தமுடையதாக அமையும்.

1. குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்தல்.


2. யாழ்.மருத்துவ பீடத்தின் இட ஒதுக்கீடு 130ஆக இருந்தபோது ஏனைய பல்கலைக்கழகங்களின் இட ஒதுக்கீடுகள் தற்போது என்ன விகிதத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளனவோ அதேவிகிதத்தில் யாழ்.மருத்துவ பீடத்திற்கு இட ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.

3. வெற்றிடமாகக் காணப்படும் இடங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து திறமை அடிப்படையில் தமிழ் பேசும் மாணவர்களை வருடந்தோறும் தெரிவுசெய்ய நடவடிக்கை எடுத்தல்.

4. 100% வீதம் திறமை அடிப்படையில் மருத்துவ பீடத்திற்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படும்வரை, வடக்கு-கிழக்கு மாகாண பல்கலைக் கழகங்களுக்கு சிங்கள மாணவரை அனுமதிப்பதை தற்காலிகமாக ஒத்திப்போடுதல்.

5. இவை முடியாத பட்சத்தில் பின்தங்கிய மாவட்ட மாணவர்கட்கு திறமை அடிப்படையில் 10% வீத இட ஒதுக்கீட்டை ஏற்படுத்தி மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கீட்டை, 55% வீதத்தில் இருந்து, 45% வீதமாகக் குறைத்தல்.

விஜி



# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புலோப்பளையில் 30ஏக்கர் கொண்ட தென்னந் தோட்டம், வீடு, கிணறு உட்பட விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சிவராசா, 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(8335)

பல நிறங்களில் லவ்பேட்ஸ், ஜவா பரட், ஆபிரிக்க லவ்பேட்ஸ் குருவிகள், புதிய இன வர்ணமீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம்.(8383)

நல்ல நிலையில் உள்ள நிஸான் சனி வகன் (Nesan Sunny AD Wagon) மொடல் 14ஸ்ரீ 4207 இலக்க முடைய கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 315/4, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். T.P.No. 077-686646 (8391)

National Jappan Colour T.V. Model T.C 2070M, Panasonic T.V. Model T.C 2051OM3, புதிய T.V. குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.பிறேம், இல.45, பங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (8408)

நல்ல நிலையில் உள்ள 40ஸ்ரீ Hiace Van, 4ஸ்ரீ ஒஸ்டின் கேம்பிறிஜ் கார் (சகல ஆவணங்களுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P. No. 3529, 2867 (8415)

Prima Broiler குஞ்சுகள், Prima அதிவிசேட பேட்டுக் குஞ்சுகள் நாளை (19.09.2002) வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். ஒருகிழமை வயதுள்ள பேட்டுக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 19, முருகேசு ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8147)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து, வேண்டிய நிறைகளில், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டைப்பிராய். (8232)

Broiler இறைச்சிக்கோழிகள், சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் காலை 6.00 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசு ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8421)

## தவறிவிட்டது

மு.குவேந்திரன் என்பவருடைய தே. அ. அட்டை (இல. 781493406V) நல்லூர் கைலாசபிள்ளையார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.15, கைலாசபிள்ளையார் கோயில், நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (8394)

ஆறுகால்மடத்தைச் சேர்ந்த திருமதி வத்சலா புஷ்பராசா (தாதி) என்பவருடைய தே.அ.அட்டை (இல. 665432440V),வி.அ.அ., உத்தியோக அடையாள அட்டை என்பன யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து உதவவும்.(8423)

நல்லூர் தீர்த்தத் திருவிழா அன்று நூடன் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பெண்கள் லுமாலா (இல.1128362) சைக்கிளுக்குப் பதிலாக (இல.55940316) லுமாலா (பெண்கள்) சைக்கிள் மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாற்றி எடுத்தவர்கள் தயவுசெய்து, பா.கௌரி, இல.186/144, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.(8418)

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவிலன்று (05-09-2002) பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி, பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்து தங்கச் சங்கிலி (பென்ரனுடன்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.மாநகரசபை (அரச கணக்காய்வுப் பகுதி) சுயோகநாசாவிடம் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8427)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியில் (வீதியோரமாக) புகையிரத நிலையத்திற்கு அருகில் 13 1/2ஐ பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது. (தொழிற்சாலை, வீடு அமைக்க உகந்த இடம்). தொடர்பு: சேதுவிபுலானந்தா, 207, K.K.S.றோட், சுன்னாகம். T.P 070 - 212709.(8350)

## வீடு வாடகைக்குத் தேவை

கணவன், மனைவி இருவர் வசிப்பதற்கு வீடு அல்லது அறை(அனெக்ஸ்) தட்டாதெருச் சந்தியை அண்டிய பகுதிகளில் தேவை. தொடர்பு: விளம்பர இல.1647,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8387)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 38 வயதுடைய, அத்தம் 12இல செவ்வாயுள்ள, பத்திரிகையாளர் (Journalist) மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: வி.இல. 1649, மே/பா உதயன். (8400)

## தேவை

வயோதிப வெளியீட்டாளருக்கு புத்தகங்கள் பொதி செய்யவும், வங்கிக கணக்கு எழுதவும் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தங்குவதற்கு இடவசதி உண்டு. சுயவிவரத்துடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: சி.எம். எஸ்.நாதன், எழுத்தாளர், 2ஆம் குறுக்குத்தெரு, மிருசுவில். (8428)

## கடற்றொழில் குழுக்கள் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.18

வடபகுதியில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடற்றொழில் அமைப்புகள் மற்றும் கடற்றொழில் குழுக்களை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.யோசெவ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கடற்றொழில் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களையும் ஒன்றுசேர்த்து ஒரு வலயமாக்கப்பட்டு அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் காலம் கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பான சகல நடவடிக்கைகளும் இந்த அமைப்புக்கள் மற்றும் குழுக்கள்மூலமாகவே மேற்கொள்ளப்படும் என்றும் - அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள "சர்வதேச கடற்றொழிலாளர்" தினத்தில் இக்குழு மற்றும் அமைப்புக்கள் தலைவர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-ரி)

## நெஞ்சம் நெருடும் இரண்டாமாண்டு நினைவுகள்

வீரச்சாவு 18.09.2000



### மேஜர் சபேசன்

*(சிதம்பரேஸ்வரர் சிவநாதன் - நல்லூர்)*

தாயகக் கனவினைத்
தாங்கிய தோழனே
மூடிய விழி திறந்து மெல்லநீ
எழுந்து பார்!
உனை எம் நெஞ்சில் நினைத்தே
ஆயிரமாயிரம் பேர்!
உன் இலட்சியக் கனவுடனேயே.

(8411) - நண்பர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 - 06 - 1913 | 30 - 08 - 2001 |



### திருமதி வள்ளியம்மை சிவசிதம்பரம்

(வேலணை கிழக்கு)

திதி: துவாதசி 18.09.2002

*எத்தனையோ ஆண்டாக எங்கள் உறவாய்*
*இருந்து வாழ்ந்த எம் அம்மா வள்ளியம்மையே*
*இத்தரையில் எமக்கு வந்த வாழ்வின்போதும்*
*இடருற்ற நேரத்தும் கலந்து நின்றாய்*
*உன் பிரிவு எமக்குதுயர் விளைத்ததம்மா!*

*25/1, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.* (8356)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## சுயவேலை வாய்ப்பு

### துணிகளில் பிரிண்டிங் செய்தலும் மற்றும் ஸ்கிரீன் பிரிண்டிங் செய்யும் முறையும்

இயந்திரம் இன்றி உங்கள் வீட்டிலேயே சிறிய இடத்தில் வைத்து திருமண அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், லெட்டர்பேட், விசிட்டிங்கார்ட், ஸ்டிக்கர், லேபிள், மரம், தகரம், பிளாஸ்டிக் பொருள், பேனா முதலியவற்றில் பிரிண்டிங் செய்ய 3 நாள்கள் செய்முறைப் பயிற்சி தருகிறோம்.

15 வருடம் இத்தொழிலில் தேர்ச்சிபெற்ற இந்திய நிபுணர் ஸ்ரீ'. P. பரதன் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவும். இப்பயிற்சி குறுகிய காலம் மட்டுமே. அத்துடன் புதிதாக CD, Four color printing, Plastic container printing, Cinema slide, Embossed printing, Foil printing முதலியவற்றையும் அறிமுகம் செய்கிறார்.

இப்பயிற்சியில் சேரவிரும்புபவர்கள் தமது பெயர் விபரத்தினை இல. 1650, மே/பா உதயன் என்னும் முகவரிக்கு 29.09.2002ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். (8426)

## PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்




- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடியதாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த தாழ்வான ஓசை
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

TV சென்டர் (pvt)Ltd.
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல் : 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.

## 2ஆம் ஆண்டு வீர நினைவுகள்

| தாயின் மடியில் | மண்ணின் மடியில் |
|---|---|
| 24 - 08 - 1972 | 18 - 09 - 2000 |



### மேஜர் தமிழ்வாணன்

(சின்னவன் - குணபாலசிங்கம்)

*(மறவன்புலோ மேற்கு - சாவகச்சேரி)*

தாய் மடியை நீக்கி விட்டு
தாயகத்தைக் காக்கச் சென்ற - தனயனே!
தரணியிலே கால் பதித்து
தமிழனாகக் காவல் நின்ற - கலைஞனே!
தாழாத உன் உயிரை
தழுவிச் சென்றாளோ - தமிழன்னை?
தமிழ்வாணனே!
தமிழ்த்தாய்க்கு உன்னைத் தந்துவிட்டு
தவித்தாலும்............. நம் உரிமை பெறுவோம்.

(8424)

இன்று (18.09.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 2ஆம் ஆண்டு நினைவு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவுடன்:
குடும்பத்தினர்.

*தற்காலிக முகவரி:*
*சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 16 - 03 - 1920 | 20 - 08 - 2002 |



### திருமதி சுப்பிரமணியம் நாகம்மா

20.08.2002 அன்று எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடி வந்து, ஆறுதல் கூறியவர்களுக்கும், எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உதவிகள் பல புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த கொடிகாமம் வணிகர் மன்றத்திற்கும், கச்சாய் சனசமூக நிலையத்தினருக்கும் மேலும் பலவகையில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் நாளை (19.09.2002) வியாழக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், அன்று மதியம் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்புடன்
மக்கள் மற்றும் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.* (C/23864)

# தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு இரு தினங்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் உள்ளூராட்சி மன்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான இரு நாள் கருத்தரங்கு இன்றும் நாளையும் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனக் கல்லூரியினால் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் திறமை, உற்பத்தித் திறன், ஆளுமை ஆகியவற்றை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் இக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது.

உள்ளூராட்சி ஆளுகை நிறுவனக் கல்லூரிப் பணிப்பாளர் டி.எம்.ரி.பி.திசாநாயக்க, வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் செல்வி டி.டி.விஜயலக்சுமி, யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, மேற்படி கல்லூரியைச் சேர்ந்த டிலான் பெர்னாந்துபிள்ளை, டாக்டர் ஹேமசிறி குறுப்பு ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்துவர்.

இக் குழுவினர் குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குச் சென்று அங்குள்ள நடைமுறைச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வர். (முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்) (ஐ-3)

NOVENA TO ST.CLARE

May the Sacred Heart of Jesus be praised, adored, glorified and loved today and every-day throughout the world forever - Amen. (8444)

**புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்**

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்புச் செய்தவர்கள் தங்களின் 31-08-2002 வரையுள்ள மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் பணம் மீளப் பெறும் திகதியையும் நிர்ணயித்துச் செல்லுமாறும் வேண்டுகின்றோம்.

க.இராஜரட்ணம் தலைவர் (C/23871) செ.எ.செல்வவதன (ஒப்பம்) பொதுமுகாமையாளர்.

**கண்ணீர் அஞ்சலி**

16-09-2002 அன்று இயற்கையெய்திய
எமது துறையின் முன்னாள் வருகை விரிவுரையாளரும்,
நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலையின்
உரிமையாளருமாகிய

**வைத்தியகலாநிதி ஏகாம்பரநாதன் உமாகாந்தன்**

அவர்களின் இழப்பையிட்டு எமது அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(8446)

## வீதி விபத்தில் வயோதிபர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.18

புன்னாலைக்கட்டுவன் சந்திக் கண்மையாக பலாலி வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், வயோதிபர் ஒருவர் தலையிலும், முகத்திலும் படுகாயமடைந்தார்.

மயிலங்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பு, கொச்சிக்கடை பகுதியில் வசித்து வரும் வைரமுத்து பழனிநாதன் (வயது71) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

யாழ்.செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொண்டு சென்ற வேளையிலேயே விபத்து நடந்ததாகவும்-

கடந்த சனிக்கிழமையே கொழும்பில் இருந்து முக்கிய அலுவல் காரணமாக யாழ்ப்பாணம் வந்ததாகவும்-காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## கடற்பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.18

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் அழிவடைந்துள்ள கடற்கரையோரப் பிரதேசங்களான கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 3கோடி 90இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.யோசெவ் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழலை அடுத்து இப்பகுதியில் மீளக்குடியமர்ந்துவரும் மக்கள், வீடு உட்பட அடிப்படை வசதிகளின்றி இன்னற்படுவதனையும், அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளிலுள்ள 200குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுப்பதற்கென சுமார் ஒருகோடி ரூபாவும், கட்டைக்காடு மாமுனை வரையான கடற்கரையோர வீதியைப் புனரமைப்பதற்கு சுமார் 2கோடி 80இலட்சம் ரூபாவும் மற்றும் இப்பகுதியில் மீனவர்கள் தங்குவதற்கான சகல வசதிகளும் கொண்ட இளைப்பாற்று மண்டபம் அமைப்பதற்கு 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஏ-ரி)

நெஞ்சங்களை நெகிழ வைத்திடும்
9ஆவது ஆண்டு நினைவலைகள்



செல்வி **செ.சுஜாத்தா** (சாவகச்சேரி இந்துக் கல்லூரி O/L மாணவி)
அமரர் **க.செல்வராசா** (உரிமையாளர், உதயன் மரக்காலை)
செல்வி **செ.யசோதா** (சாவகச்சேரி மகளிர் ம.வி. உயர்தர உயிரியற் பிரிவு மாணவி)

மண்ணுலகில்:
1977.07.20 1954.12.18 1976.06.29

விண்ணுலகில்: 1993.09.28
திதி: 2002.09.18

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் எம் ஆறாத்துயர் நீங்கவில்லை!
நீண்ட நாள்கள் சென்றாலும் நம் நினைவு மட்டும் அகலவில்லை!
மாண்டு நீர் மடிந்தீரோ? இந்த மண்ணுலகை ஏன்தான் மறந்தீரோ?
மீண்டும் நீர் வருவீரோ? நாம் படுகின்ற வேதனையைத் தவிர்ப்பீரோ?
தூண்டிலில் அகப்பட்டுத் துவளுகின்ற துள்ளுமீன் போல இங்கே
துவண்டு யாம் துடிக்கின்றோம்! நும் பிரிவுத்துயர் பொறுக்கமுடியவில்லை!
ஆண்டவன் திருவடி நிழலில் நல்ல ஆறுதல்தான் அடைவீரே!
ஆற்றாமையால் யாமிங்கு அழுது துடித்து நாம் புலம்புகின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி:
செ.மங்கையர்க்கரசி (பிரான்ஸ்)

(C-23870)

உங்கள் பிரிவால் துயருறும்:
திரு.திருமதி உதயன்
(கனடா - மகன் + மருமகள்)

# செய்திக் கொத்து

## கசிப்பு வழக்கில் அபராதம்

யாழ்ப்பாணம்,செப்.18

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மூன்றுபேருக்கு யாழ்நீதிமன்றத்தால் 13ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் யாழ்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட யாழ்ஓடக்கரை வீதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை கொன்ஸ்ரன்ரைன் என்பவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

குருநகர், மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லோஸ் நிக்கலஸ் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

ஈச்சமோட்டையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை அன்ரன் என்பவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணமும் -

செலுத்துமாறு யாழ்நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (ஒ-10)

## அரியாலைப் பகுதி விவசாயிகள் கவலை

கொழும்புத்துறை,செப்.18

அரியாலைப் பகுதியில் உள்ள சுமார் 80 ஹெக்டெயர் வயல் நிலங்களில் இம்முறை காலபோகப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பலமுறை பாதுகாப்புத் தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

செம்மணி, கட்டடி, நாவலடி, அரியாலைக் கிழக்கு பகுதி வயல் நிலங்களே பலவருடங்களாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாது தரிசாகக் கிடப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ-ரி)

## மாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 2000 - 2002 ஆம் கல்வி ஆண்டில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு கடந்த ஜுன் மாதம் வழங்கப்பட்டபோது அதனைப் பெறத் தவறிய மாணவர்கள் தமக்குரிய கொடுப்பனவை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் கேட்டுள்ளார். (ஒ-ரி)

## சட்டிக்கலப்பைகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ்.குடாநாட்டு விவசாயிகளின் பாவனைக்கென ஜப்பானிய உதவித்திட்டத்தின்கீழ் உழவு இயந்திரங்கள் கமநல கேந்திர நிலையங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தன. அவற்றுக்கான ஐந்து சட்டிக்கலப்பைகள் தற்போது கமநல கேந்திர நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நல்லூர், கைதடி, கீரிமலை, தொல்புரம், வேலணை ஆகிய இடங்களில் உள்ள கமநல கேந்திர நிலையங்களுக்கே இவை கிடைக்கப் பெறறுள்ளன.

இக்கலப்பைகள் தேவைப்படும் விவசாயிகள் தத்தமது கேந்திர நிலையங்களுடன் தொடர்புகொண்டு இவற்றைப்பெற்று பயன் படுத்தமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

## வாந்திபேதிநோயாளி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி!

யாழ்.குடாநாட்டில் தொடரும் வாந்திபேதியின் தாக்கத்திற்கிலக்கான மேலும் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

வளலாயைச் சேர்ந்த வசீகரன் கலாநிதி (வயது32) என்பவரே இந் நோயாளியாவார்.

இவருடன் இதுவரை 21பேர் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர். (15)

## பரிசுபெற்ற தென்மராட்சி மாணவர்கள்!

தென்மராட்சி,செப்18

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில் தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலைகளின் மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் ஐந்து மாணவர்களுக்கான போட்டியில் மீசாலை வீரசிங்கம் ம.வி. மாணவி நிலாஜினி பாஸ்கரன் முதலாமிடத்தையும், தரம் ஒன்பது மாணவர்களுக்கான போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி அபிராமி மோகனராஜலிங்கம் இரண்டாமிடத்தையும், தரம் 11 மாணவர்களுக்கான போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி செந்துஜா தபேந்திரன் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

குழுப்பாடல் போட்டிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் கனிஷ்ட ஆண்கள் பிரிவு இரண்டாம் இடத்தையும், சிரேஷ்ட ஆண்கள் பிரிவும், சிரேஷ்ட பெண்கள் பிரிவும் மூன்றாமிடங்களையும் பெற்றுள்ளன. (ஒ-117)

## சனசமூக நிலைய கட்டடங்கள் திறப்புவிழா

வலிகாமம் தெற்கில் கட்டப்பட்ட சனசமூக நிலையப் புதிய கட்டடங்களின் திறப்புவிழா இன்று புதன் கிழமையும் எதிர்வரும் வெள்ளிக் கிழமையும் நடைபெறவுள்ளன.

ஏழாலை மத்திய சனசமூக நிலையத்தின் கட்டடத் திறப்புவிழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஏ.ஆர்.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும்.

தாவடி சிவசக்தி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா வெள்ளிக்கிழமை பகல் மு.சிவநாதன் தலைமையில் இடம்பெறும். (ஒ-152)

## அதிரடிப்படைக்கு ஆள்சேர்க்க நடவடிக்கை

விசேட பொலிஸ் அதிரடிப்படையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிதாக ஆயிரத்து 665 பேர் தெரிவு செய்யப்படவிருப்பதாக பிரதிப் பொலிஸ் மா.அதிபர் நிமல் குணதிலக கூறியுள்ளார்.

இதுபற்றி மேலும் அவர் தெரிவிக்கையில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 20ஆம் திகதி வெளியிடப்படுமெனவும் -

ஆயிரத்து 600 பொலிஸாரையும் 65 உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் - தெரிவித்தார். (ஒ)

# தெஹிவளை கொலை பற்றி சி.ஐ.டியினர் விசாரணை

கொழும்பு,செப்.18

ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கை வந்த பொறியியலாளர் முத்துலிங்கத்தின் கொலை தொடர்பான விசாரணைகள் சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

'இன்டர்போல்' சர்வதேச பொலிஸாரும் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிவருவதாக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்கொலை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் வதிவிட அந்தஸ்துப் பெற்ற முத்துலிங்கம், மிக நீண்டகாலம் அங்கு வசித்துவந்தார். அங்கு பிரபலமான பொறியியலாளராகவும் இருந்துள்ளார்.

இவர் ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே ஒரு கோவில் கட்டிமுடித்திருந்தார். தற்போதும் ஒரு கோவில் அவரால் அங்கு கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. இது சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் எழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-12)

**தூரிகை நுண்கலையகம்**

**பயிற்சி வகுப்புகள்**

- உடையமைத்தல்
- கேக் ஐசிங்
- Hair Style
- துணி பெயின்ரிங்
- பூவேலைப் பயிற்சி

- விரும்பிய பயிற்சியை மட்டும் பயிலும் வசதி உண்டு.
- புதிதாக இணைந்துகொள்வோருக்கு வாராந்தம் "பல்துறைசார் பயிற்சிக் கருத்தரங்கு, கைப்பணிப் பயிற்சி" போன்றன இலவசமாகும்.
- 3 மாதப்பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சி ஒன்றுக்கான முழுமையான கட்டணம் ரூ. 400/- மட்டுமே.

*கலந்துகொள்ள விரும்புவோர் பயிற்சி வகுப்புகள் தொடர்பாக 21.09.2002 சனி காலை 10மணிக்கு நிறுவனத்திற்கு சமுகந்தரவும்.*

செங்குந்த வீதி,
(8435) கல்வியங்காடு.


# குடாநாட்டில பிடிக்கப்படும் மீன்களின் அளவு அதிகரிப்பு

யா[illegible]டாநாட்டில் கடந்த ஓகஸ்ட் மாத[illegible]ரையான எட்டு மாத காலப் [illegible]தியில் 3 ஆயிரம் மெற்றிக்தொன் [illegible]கள் பிடிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.ஏ.யோசப் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 2ஆயிரத்து 650 மெற்றிக்தொன் மீன்கள் பிடிக்கப்பட்டு வந்ததாகவும்-

இந்த ஆண்டில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியவற்றை அடுத்தே இந்த எட்டுமாதங்களில் 3ஆயிரம் மெற்றிக்தொன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு குறைவாக இருந்தமைக்கு கடல்வலயத் தடைச்சட்டம் மற்றும் கடற்படையினரின் கெடுபிடி ஆகியவையே காரணங்களாகும். தற்போது கடல்வலயத் தடைச்சட்டம் நீக்கப்பட்டுள்ளமையால் மீனவர்கள் சுதந்திரமாக தெழில் செய்வதுடன் அதிக நேரம் மீன்பிடிக்கக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை -

இந்திய மீனவர்களின் மீன்பிடி றோலர்கள் வடகடல் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதுடன் குடாநாட்டு மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கும் சேதமேற்படுத்தி வருகின்றன. இது தொடர்பாகப் பலதடவைகள் பலருக்கும் முறையிட்டும் கூட இதுவரை எவருமே நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-10-ரி)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுப் பரிசோதகர்களுக்குமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. சகல கூட்டுறவுப் பரிசோதகர்களையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (ஒ-9)

## சமுர்த்தி அதிகாரிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம்,செப்.18

சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தலைமையிலான குழுவொன்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டம் தொடர்பான தற்போதைய நிலைபற்றியும் எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். செயலகத்தில் இக்குழுவினர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர். இக்கலந்துரையாடலில் பிரதேச செயலர்களையும் சகல சமுர்த்தி முகாமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். சமுர்த்தி அபிவிருத்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் கேட்டுள்ளார். (ஒ-10)

## கைதடியில் விபத்து

நேற்றுமுன்தினம் காலை கைதடி வயோதிபர் இல்லத்திற்கு முன்பாக இடம்பெற்ற வீதிவிபத்தில் காயமடைந்த கோவிலாக்கண்டியைச் சேர்ந்த வசந்தராசா சுதன்(வயது 15) என்பவர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-ரி)


**வடமராட்சியில் ஸ்கிறீன் பிறிண்டிங்**

எந்தவிதமான அச்சு வேலைகளையும் இயந்திரங்கள் எதுவுமின்றி இலகுவான முறையில் எழிலுற அச்சிடும் தொழில்முறை ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள்!

பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது!

கலந்துகொள்ள விரும்புவோர்

தொடர்புகொள்க:- தூரிகை, ம.ம.வி. வீதி, நெல்லியடி. (8434)


## முதலாம்வருட விஞ்ஞானபீட மாணவர்களுக்கான அறிவித்தல்

நாளை (19.09.2002) வியாழக்கிழமை சுற்றுலா செல்ல விருப்பதால் சுற்றுலா செல்பவர்கள் காலை, மதிய உணவுகளுடன் காலை 6.00 மணிக்கு Student Complexஇல் ஒன்றுகூடவும்.

(8429) சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள்.

## பணியாளர் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை கன்ரீனுக்கு சிட்டை லிகிதர், உணவு பரிமாறுபவர்கள், சமையல் உதவியாளர்கள் தேவை. கன்ரீன் நடத்துநருடன் உடன் தொடர்புகொள்ளவும்.

(8432) - நடத்துநர்.

## மணிவிழா நாயகருக்கு மனம்நிறைந்த வாழ்த்துக்கள்!

இன்று புதன்கிழமை ஷஷ்டியப்த பூர்த்தி எனும் மணிவிழாவைக் கொண்டாடி மகிழ்வில் திளைக்கும் இணுவிலைச் சார்ந்த

**பிரம்மஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள்**
**ஸ்ரீமதி ரஞ்சிதமணி அம்மா**

தம்பதியர் சிறப்புடன் வாழ்ந்து சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்று நீடூழிவாழ எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்!

*அராலி மத்தி, வட்டுக்கோட்டை.* (8438) அராலியூர் சிற்பாசாரியார் கந்தசாமி கோபாலசிங்கம்

## கண்ணீர் அஞ்சலி

யா/நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய பங்குத்தந்தை **வண. பிதா பீற்றர் துரைரத்தினம்** அடிகளாரின் அன்புத் தந்தையாரும் இளைப்பாறிய அதிபருமாகிய

**அமரர் இராயப்பு இராசசிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரோடு நாமும் துயரினைப் பகிர்ந்துகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித நீக்கிலார் ஆலயம், நாவாந்துறை. (8432) பங்கு சபையும், பங்கு மக்களும்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 06 - 1922 | உதிர்வு 22 - 09 - 1999

கைதடி கிழக்கு

**அமரர் ஆறுமுகம் வேலாயுதம்**

*ஆண்டுகள் மூன்று ஆனால் என்ன*
*எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை*
*உங்கள் நினைவுகள் இருக்கும்!*

*ஸ்ரீமுருகன்பல்பொருள் வாணிபம், மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.* (C/23863)

அன்புடன் நினைவு கூரும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


யாழ் நகரில் !

**PCS**

International

சர்வதேச அளவில் ISO 9002 அங்கிகாரம் பெற்றதும், மக்களின் அபிமானத்தை வென்றதுமான **P4 Computer Systems**






PCS Computer பின்வரும் சான்றிதழ்களைக் கொண்டுள்ளது

ISO 9002 PCI FC CE LISTED 6K51 E141662 I.T.E 71001007

விற்பனைக்கான எமது மேலதிக பொருட்கள்

- Printers
- Scanner
- UPS
- Stabilizer
- Toners
- Cartridges
- Ribbons
- Computer accessories
- CD Copy Duplicaters
- Computer Tables
- ect ......

விற்பனைக்கு பிந்திய சேவையில் முன்னோடிகளான....

**SDS Computer Services**

Hotline : 077- 726290
Tel : 021 - 3251

இல. 178 (114), அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எங்களின் நோக்கம் - உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்.


## மரண அறிவித்தல்கள்

### சி.சிவபாதசுந்தரம்

*(முன்னாள் அதிபர் - பரமேஸ்வராக் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம்)*

பரமேஸ்வராக் கல்லூரி/வைத்தீஸ்வரா வித்தியாலய முன்னாள் அதிபர் சி.சிவபாதசுந்தரம் 15.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் சிவச்செல்வி, குகசோதி, சச்சிதானந்தசிவம், மீனலோசனா, யோகானந்தசிவம், பங்கயற்செல்வி ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவலோகநாதன், குகானந்தன், விஜயநாயகம், சிவமனோகரி, சிவசங்கரன், மஞ்சுளா, Dr.பாலகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளவத்தை பாமன்கடை ஒழுங்கை, இலக்கம் 36இல் நாளை (19.09.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பொறளை கனத்தை மயானத்தில் பி.ப. 12.30 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.சிவலோகநாதன்.

(சி-23865)

### திருமதி கந்தசாமி புஸ்பராணி

நவாலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 12/25, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி புஸ்பராணி நேற்று(17.09.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: இ.எஸ்.கந்தசாமி (கணவர்) (E.S.K. ஜுவலறி)

*12/25, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (8440)



முன்னாள் மாவட்ட ஆணையாளர் ரோகித உடவத்த யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர் முகத்திடம் நடமாடும் கண் பரிசோதனைக் கூடம் அமைந்த வாகனத்தின் சாவி கையளிக்கப்படுவதை முதல்படத்திலும் அன்பளிப்பு செய்யப்பட்ட பஸ்ஸையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

## ரூ.30 லட்சம் பெறுமதியான நடமாடும் கண் பரிசோதனைக் கூடம் யாழ்.ஆஸ்பத்திரிக்கு நேற்று அன்பளிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.18

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நடமாடும் கண் பரிசோதனைக் கூடம் அமைந்த பஸ் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான வைபவம் நேற்றுக் காலை 11 மணியளவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் லயன்ஸ்கழக யாழ்.பிராந்திய தலைவர் லயன்.எஸ். சற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் 30லட்சம் ரூபா பெறுமதியான நடமாடும் கண்பரிசோதனைக்கூடம் அமைந்த வாகனத்தை லயன்ஸ் கழக முன்னாள் மாவட்ட ஆணையாளர் லயன் ரோகித உடவத்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகத்திடம் கையளித்தார். அத்துடன் ஒரு தொகுதி விழி வெண்படல வில்லைகளும் வறிய மாணவர்களுக்கான 500அப்பியாசக் கொப்பிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இவ்வைபவத்தில் லயன்ஸ் கழகத்தின் திட்ட முகாமையாளர் கே. வி.முத்துக்குமாரசாமி, முன்னாள் மாவட்ட ஆணையாளர் கே.தில்லைநாதன், கண்பரிசோதனை வைத்தியர் டாக்டர் எஸ்.குகதாஸன், யாழ் போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-8-15)

## ஜனாதிபதியிடம் பரிசு பெறும் யாழ். வலய மாணவர்கள்

யாழ்ப்பாணம்,செப்.18

திருகோணமலையில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி இடம்பெறும் ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு நேரடியாக ஜனாதிபதியிடம் சான்றிதழை பெறுவதற்கு யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு -

தரம்.13 - ந.சுமிலா (யா/இடைக்காடு ம.வி.), நி.செந்தூரன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), இ. சிவாந்தி (யா/திருக்குடும்ப கன்னியர்மடம் (ஆங்கிலம்), இ.ராஜ்காந்த் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), அ.பூஜினி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.சபேசன் (யா/யாழ்.இந்துக் கல்லூரி), கருணாகரன் (யா/யாழ் இந்துக் கல்லூரி),

தரம் 6 - எஸ்.ஜென்சி (யா/சென். மேரிஸ் வித்தி),

தரம் 7 - ஆர்.பவிதரன் (யா/சென். றோக்ஸ். றோ.க.வித்தி),

தரம் 8 - கே.சுவேதிகா (யா/சன்மார்க்க ம.வி)

தரம் 9 - எஸ்.ரிஷாந்தன் (யா/சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை),

தரம் 10 - கே.கோகுலன்(யா/இடைக்காடு ம.வி)

தரம் 11 - ரி.நிலுஜா (யா/நல்லூர் இ.த.க. பெண்கள் பாடசாலை), எஸ்.தர்சிகா (யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்)

இம்மாணவர்களை நிகழ்விற்குச் செல்வதற்கு தயார்படுத்துமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். பிரயாண ஒழுங்குகள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிங்கள மாணவர்கள் முதலாமிடத்தில்!

கொழும்பு,செப்.18

2002 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டன. அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தை இரு சிங்கள மாணவர்கள் பெற்றிருக்கின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இந்தப் பரீட்சை நடைபெற்றது. இதுவரை காலமும் இல்லாதவாறு பரீட்சை நடைபெற்று 37 நாள்களில் பெறுபேறுகளை வெளியிட்டு பரீட்சைத் திணைக்களம் சாதனை ஏற்படுத்தியிருப்பதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ.ஏ.மஹிந்த விஜயசிறி தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில் 2 லட்சத்து 40ஆயிரத்து 707சிங்கள மொழிமூலப் பரீட்சார்த்திகளும் 65 ஆயிரத்து 456 தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 3 லட்சத்து 6 ஆயிரத்து 163 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கான பெறுபேறுகள் நேற்று அந்தந்த பாடசாலைகளில் வெளியாகியிருந்தன.

வடக்கு-கிழக்கு உட்பட வெளி மாவட்ட பாடசாலைகளின் பெறுபேறுகள் தபால் மூலம் அனுப்பப்பட்டன. இன்று அல்லது நாளை அந்தப் பெறுபேறுகளை அறியலாம் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

பெறுபேறுகளின்படி தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற சிங்கள மாணவர்கள் 192 புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்கள்

டிக்வெல மத்திய மகாவித்தியாலய மாணவியான பி.எம்.விதாரணகே, ஹெக்டிமுல்ல பண்டாரநாயக்க கனிஷ்ட வித்தியாலய மாணவனான எஸ்.பி.ஜே.ஆர்.செனரத் ஆகிய இருவருமே அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்ற தமிழ் மாணவன் 177 புள்ளிகளை மட்டுமே பெற்றிருக்கிறார். (ம)

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை இராயப்பு இராஜசிங்கம்

*(இளைப்பாறிய அதிபர்)*

வசாவிளானைப் பிறப்பிடமாகக்கொண்ட இராயப்பு இராஜசிங்கம் 16.09.2002 திங்கட்கிழமை தனது 97ஆவது வயதில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மேரிதங்கம்மாவின் அன்புக் கணவரும், றெஜினா (இத்தாலி), திரேசம்மா (கனடா), இம்மானுவல் (இத்தாலி), லூஜிஸ் அல்பிறட் (இத்தாலி), பிலோமினா (பத்தாவத்தை), லூர்து (கனடா), அருட்பணி பீற்றர் துரைரெட்ணம் (பங்குத் தந்தை - நாவாந்துறை), பேபி (பத்தாவத்தை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், பரராஜசிங்கம் ஆகியோரினதும், சவுந்தலா, நேசமலர், எட்வேட்ராஜா, கருணாதிராஜா (கனடா), தம்பிஜயா ஆகியோரின் மாமனாரும், அருட்தந்தையர்கள் ஜேம்ஸ் சிங்கராஜர், தவராஜசிங்கம் ஜெயசீலன், அருட்சகோதரன் எட்வினநாதன், அருட்சகோதரி வேஜினா ஆகியோரினது அன்புப் பேரனாரும், அருட்சகோதரிகள் புருடன்சியா (அ.கா), பரமேஸ் (அ.கா) ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் உடற்பேழை நல்லடக்கத்திற்காக நாளை (19.09.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பத்தாவத்தை, இளவாலை இல்லத்திலிருந்து புனித அன்னாள் கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பத்தாவத்தை,*
*இளவாலை.*
T.P. 021-2223704
(8447)

தகவல்:
அருட்பணி R.பீற்றர்
துரைரெட்ணம்

### சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

*(மணியம் ஸ்ரோர்ஸ் - புங்குடுதீவு)*

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (2002.09.17) செவ்வாய்க் கிழமை புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் மருதப்பு - நாகமுத்து தம்பதிகளின் மருமகனும், பராசக்தியின் பாசமிகு கணவரும், நாகேஸ்வரன் (பிரான்ஸ்), நந்தினி (கொழும்பு), சரோஜா (பிரான்ஸ்), சோதிகலா (பிரான்ஸ்), அருட்செல்வி (லண்டன்), சந்திரவதனி (சுவிஸ்), காலஞ்சென்ற தரனேஸ்வரன் (றெஜி) மற்றும் ரேணுகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதமலர் (பிரான்ஸ்), தர்மராசா (கொலண்ட்), சீராளன் (பிரான்ஸ்), மோகனகுமார் (லண்டன்), புவனேந்திரராஜா (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஹரிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கருணாகடாட்சி புவனேஸ்வரி, கருணாகரன், கோபாலபிள்ளை, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் பரமேஸ்வரி வில்வரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, தர்மலிங்கம், ஞானமூர்த்தி, தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் சாரதாதேவி, சற்குணம், இராஜேஸ்வரி, மணிமேகலை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சங்கத்தாகேணி,*
*புங்குடுதீவு-03.*
(8454)

தகவல்:-
சு.கோபாலபிள்ளை
(சகோதரன்)
தி.பராசக்தி
(மனைவி)

### தம்பிப்பிள்ளை சின்னத்துரை

இணுவிலைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் காரைக்கால் சிவன்கோயில் பூசகர் தம்பிப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் நேற்று (17.9.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரத்தினம், காலஞ்சென்ற கந்தையா விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பராசக்தி, பூபதி, யோகேஸ்வரி, மங்களேஸ்வரி, ஜெகதீஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா, தர்மஞானசிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரலிங்கம், சிவசுப்பிரமணியம், முருகையா, மகேந்திரதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.9.2002) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்லாகம் கிழக்கு,*
*மல்லாகம்.*
(C/23874)

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்


### துயர்பகிர்கின்றோம்

**வைத்தியகலாநிதி ஏகாம்பரநாதன் உ.மாகாந்தன்**

*(உரிமையாளர், நாயன்மார்கட்டு வைத்தியசாலை)*

அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(8449) Dr.S.சிவநேசன் (பாபு), காரைநகர்.

### தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட அதிபர் சங்கம் நடத்தும் சேவைக்காலப் பாராட்டு விழா

இன்று பாராட்டுப் பெறும் ஓய்வுபெற்ற அதிபர்கள்

திரு.மு.இராசரத்தினம்
(அதிபர், யா/மயிலிட்டி கலைமகள் ம.வி.)

திரு.செ.பி.இளமுருகனார்
(அதிபர், யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பா.)

திரு.வ.மார்க்கண்டு
(அதிபர், யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பா.)

திரு.க.அருணாசலம்
(அதிபர், யா/அளவெட்டி அருணாசலம் வித்தி.)

இவர்கள் சகல வளங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

- அதிபர் சங்கம்

தெல்லிப்பழை கல்விக் கோட்டம் (8453)

### புதிய வகுப்புகள் ஆரம்பம்

மக்கள் நலன்காக்கும் பிரிவு
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

இங்கு Spoken English with Grammar Class மற்றும் தமிழ், ஆங்கில கையெழுத்து, சுருக்கெழுத்து, முன்பள்ளி வகுப்புகள் 01-10-2002 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு:- பருத்தித்துறை வீதியில் இயங்கிய எமது நிறுவனம் 01-08-2002 இலிருந்து பழைய வீதி, கோப்பாயில் இயங்குகின்றது.

(8448) - நிர்வாகம்.

### கட்டடக் கலைஞர் தேவை (Architect)

கோப்பாய் தெற்கு (இருபாலை) கற்பக விநாயகர் ஆலய புனருத்தாரண வேலை ஆரம்பிக்கப்படவிருப்பதால் சைவ ஆகம விதிக்கமைய மாதிரிப்படம் வரைவதற்கு அனுபவம் வாய்ந்த கட்டடக்கலைஞர் உடனடியாகத் தேவை. மேற்படி திருப்பணிச் சபையிடம் தொடர்புகொள்ளவும்.

ஒருவாரத்திற்குள் தொடர்புகொள்ளவும்
(17-09-2002 தொடக்கம் 24-09-2002 வரை)

(8451) - திருப்பணிச் சபை.

### NEW SCIENCE HALL
JAFFNA

20-09-2002 வெள்ளி
மேலதிக வகுப்பு
11.00 - மின்னியல்
12.30 - வெப்பவியல்
ஆசிரியர்
திரு.குமரன்
(8450)

### லஷ்மி இணுவில்.

அஜித்.. சங்கவி.. நாசர் நடித்த
அமராவதி
(ரீலீஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
அடுத்த வெளியீடு ஜெமினி
(8345)

### நாகம்ஸ் சுன்னாகம்

சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
உன்னை நினைத்து (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(8437)

### நிறஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், சௌந்தர்யா நடித்த
கண்டேன் சீதையை
(ரீலீஸ்)
காட்சிகள் : 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C/23810)

### ராஜா யாழ்ப்பாணம்.

5 ஆவது ஜனத்திரள் வாரம்
10.30, 2.30 மட்டும்
ரஜனி, மனிஷா, கவுண்டமணி நடித்த
பாபா
இரவு 7.00, 9.10 மட்டும்
KILLER BABE FOR THE C.I.A.
(C/23386)

# நேற்றைய பேச்சில் காணப்பட்ட இணக்கம்

சட்டாஹறிப் கடற்படைத் தளத்தில் நேற்று இரண்டாவது நாளாக அரசுக்கும் புலிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சில் ஒரு விடயம் சம்பந்தமாக முழு இணக்கம் காணப்பட்டுள்ளது. தாய்லாந்தில் உள்ள நோர்வேத் தூதரகம் இதை அறிவித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு நிர்வாகம், அதிகாரப் பரவலாக்கல் என்றெல்லாம் இப்போது பேசிக்கொண்டிருக்காமல் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு குறுகியகாலத் தீர்வு காண்பதுதான் அவசியமானது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது. நோர்வேத் தூதரகம் அறிக்கை ஒன்றில் இதைத் தெரிவித்திருக்கிறது.

யுத்தத்தின்போது காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு இரு குழுக்களின் பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்றை நியமிப்பது என்றும் இணக்கம் காணபபட்டுள்ளது.

மூன்று வாரங்களுக்கு ஒரு முறை பேச்சு நடைபெறவேண்டும். என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இது பற்றி இன்றைய பேச்சின்போது முடிவு செய்யப்படும். பேச்சு மிகவும் சுமுகமாக நடைபெற்றது என்றும் நோர்வே தூதரக அறிக்கை கூறுகிறது. (ம)

## தமிழ்மொழி மூலம் தோற்றியோரில்

# புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்துக்கு 6ஆம் இடம்

கடந்தமாதம் 10ஆம் திகதி நடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

தமிழ்மொழி மூலம் தோற்றிய பரீட்சார்த்திகளில் 6 ஆம் இடத்தை யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த - உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மயூரன் பெற்றுள்ளார். அவர் 173 புள்ளிகளை எடுத்துள்ளார்.

திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி மாணவனான வி.சேரலாதன் 177 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திற்கு வந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவனான ஏ.விதுர்சன் 170 புள்ளிகளைப் பெற்று 12 ஆம் இடத்திற்கும் -

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் என்.சதீஸ்காந்த் 167 புள்ளிகளைப் பெற்று 21 ஆம் இடத்திற்கும் - வந்துள்ளனர்.

பரீட்சை முடிவுகள் தபால் மூலம அனுப்பபட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கான பரீட்சை முடிவுகள் ஓரிரு தினங்களில் இங்கு எடுத்துவரப்படவிருக்கின்றன. (ம-3)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தம் தொடர்வதால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்படமாட்டாது என்று அன்றைய அரசு அறிவித்திருந்தது.

இதனால் அரசும் - புலிகள் இயக்கமும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு பின்னர் சர்வதேச நாடுகளிடம் கூட்டாக வேண்டுகோள் விடுப்பதன் மூலம் மட்டுமே கண்ணிவெடிகளை அகற்றும் துரித திட்டத்தை நடைமுறைப்படுத்தமுடியுமென இருசாராரும் கருதுகின்றனர். (ஐ)

## எதிர்பார்த்ததைவிட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் உதவியாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் நாம் இப்போது எதிர்நோக்க வேண்டிய சவால்.

இங்கே நடக்கும் பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பற்றி அமெரிக்காவில் தற்போதுள்ள பிரதமர் ரணிலுக்குத் தெரிவித்திருக்கின்றோம். அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். பேச்சு முன்னேற்றம் அடைந்திருப்பதை கனடா மற்றும் நெதர்லாந்துத் தூதுவர்களுக்கும், இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். அவர்களும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள் என்று பிரதமர் எங்களிடம் சொன்னார்.

இந்த நாடுகளுடன் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்திக்கொள்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.

"அதுசரி, இன்று (17-09-2002) 6 மணிநேரம் பேசியிருக்கிறீர்கள். என்ன பேசினீர்கள் என்று சொல்ல முடியுமா?" - என்று 'உதயன்' பிரதிநிதி கேட்டார்.

பேராசிரியர் பீரிஸ் பிகு பண்ணாமல் உடனே பதிலளித்தார். இடம் பெயர்ந்து உள்ளூரில் இருப்பவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தல், உயர்பாதுகாப்பு வலயங்கள், கண்ணிவெடிகளை அகற்றுதல் முதலான விடயங்கள் பற்றித் தாங்கள் பேசியதாக அவர் கூறினார்.

"அரசியல் பேசவில்லையா?" இது 'உதயன்' பிரதிநிதியின் கேள்வி.

"அரசியலும் பேசினோம். ஆயினும், அதைவிட மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அதைப்பற்றி நிறையப் பேசினோம்."

"புலிகள் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கத்தின் வன்னிப் பயணம் பற்றிய நிலைமை என்ன?" - என்று உதயன் பிரதிநிதி கேட்டபோது -

"அதுவா? அது எதிர்வரும் ஒக்ரோபர் கடைசிப் பகுதியில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. நோர்வே அனுசரணையாளர்கள் அதனைக் கையாளுவார்கள்."

- என்றார் பேராசிரியர் பீரிஸ்.

சிரித்தபடி பேராசிரியர் பீரிஸ் இன்னொன்றையும் சொன்னார். புலிகள் குழுவினரோடு உத்தியோகபூர்வமாகப் பேசுவதுபோக பாலாவுடன் தனிப்பட்ட முறையில் பல தடவைகள் பேசியிருக்கின்றேன். அவரோடு பேசுவது ஒரு தனி அனுபவம். பேச்சு வெகு சுவாரஸ்யமாகவும், அதேவேளை - பொருள் பொதிந்ததாகவும் இருக்கும்.

-இப்படி பேராசிரியர் பீரிஸ் பாலாவுக்கு 'சேட்டிபிக்கேட்' கொடுத்தார்.



அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்து உரையாடியபோது எடுக்கப்பட்ட படம் இது. இந்தச் சந்திப்பின்போது தற்போது தாய்லாந்தில் இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் குறித்து பிரதமர் ரணில், வாஜ்பாய்க்கு எடுத்து விளக்கினார்.

## ஹெல்கிஸன் இந்தியாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவுக்குச் சென்று அங்கிருந்து கடல் விமானம் மூலம் இரணைமடுக் குளத்தில போய் இறங்கிவிட்டு பின்னர் அதே வழியாக லண்டன் திரும்பியவர் பாலசிங்கம்.

நோர்வேயின் ஏற்பாட்டிலேயே அந்தப் பிரயாண ஒழுங்கு செய்யப்பட்டது.

இம்முறை அந்த வழிப் பயணத்தில் சிக்கல் எழுந்துள்ளது. இப்போது புலிகள் இயக்கம்மீது தடை இல்லை. விரும்பினால் எல்லோரையும் போல அவரும் கட்டுநாயக்காவுக்கு விமானத்தில் சென்று அங்கிருந்து ஹெலியில் வன்னிக்குப் போகலாம். பாதுகாப்புக் காரணங்களுக்காக அதை அவரோ, நோர்வே அனுசரணையாளர்களோ விரும்பவில்லை.

எனவேதான், தாய்லாந்திலிருந்து இந்தியாவின் தென்பகுதி மாநிலம் ஒன்றுக்குச் சென்று அங்கிருந்து ஹெலி மூலம் அவரை வன்னிக்கு அனுப்ப நோர்வே அனுசரணையாளர்கள் முயற்சி செய்கிறார்கள்.

இந்தியாவில் புலிகள் இயக்கத் தடை இன்னமும் இருக்கிறது. அதனால் அன்ரன் பாலசிங்கத்தை இந்தியாவில் காலடி வைக்கவிடக் கூடாது என்று தமிழ்நாடு அரசு குரல் எழுப்பி வருகிறது. மத்திய அரசுக்கும் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறது.

கேரளா, கர்நாடகம், ஆந்திரா போன்ற தென்மாநிலங்கள் இந்த விடயத்தில் அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. பாலசிங்கம் இந்திய மண்ணில் நடமாடாமல் விமான நிலையத்தில் இறங்கி அங்கிருந்து ஹெலியில் இலங்கை செல்வதால் பிரச்சினை இல்லை என்றே அந்த மாநிலங்கள் கருதுகின்றன.

மத்திய அரசும்கூட இப்போது இதை ஒரு பெரிய பிரச்சினையாக நினைக்கவில்லை. புலித்தடை இலங்கையில் நீக்கப்பட்டுவிட்டது. தாய்லாந்தில் பேச்சும் ஆரம்பமாகிவிட்டது. பேச்சுக்கு இந்தியா ஆதரவு அளிக்கிறது. சட்ட நிபுணத்துவ உதவிகளை வழங்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் ஹெலகிஸன் இந்திய மத்திய அரசை அணுகுகிறார். அநேகமாக இந்திய அரசின் அனுமதியுடன் அன்ரன் பாலசிங்கம் இந்தியாவூடாக வன்னி சென்றடைவார் என்று இங்கே (தாய்லாந்தில்) பேச்சு அடிபடுகிறது. (ம)

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதிக்கு தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் தாய்லாந்தில் இடம்பெறும் பேச்சுக்கள் காரணமாக தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலைப் பிற்போடுமாறு தொடர்ச்சியாக அரசை வற்புறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3-10)


புதிய சகாப்தத்திற்கான வழிகாட்டிகளாக நாம் ஒருவரே

New Batches

Dip. in MS Office 4 Months
Dip. in Desktop Publishing 3 Months
Internet & email 1 Months

Commence on 21-09-2002 at 9.30 am.

STP Your Partner in IT Solutions





**புனரமைக்கப்பட்ட ஏழாலை மத்திய சனசமூக நிலையத் திறப்பு விழா**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிதி உதவியில் புனரமைப்புச் செய்யப்பட்ட மேற்படி சனசமூக நிலையம் இன்று (18.09.2002) புதன் பி.ப. 3மணிக்கு திரு.க.கமலசேகரன் J.P.U.M (தலைவர், வலி. தெற்கு பிரதேச சபை) அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை, கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகம்.

(8452)



**CAREER.COM INSTITUTE**

யாழ். கல்விப் பாரம்பரியத்தில் ஒரு புதிய ஆரம்பம்!

நீங்கள் ☆ ஒரு பட்டதாரியா?
☆ பல்கலைக்கழக, உயர் தொழில்நுட்ப, - வெளிவாரி மாணவரா?
☆ A/L பரீட்சையில் சித்தியடைந்து விட்டீர்களா?
☆ அரச, தனியார்துறை ஊழியர்களா?

உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள

ஆமெனில் இணையுங்கள் CMA

Certified Management Accountants

வட மாகாணத்தில் முதன்முறையாக யாழ்நகரில் CMA வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அடிப்படைத் தகைமைகள்
A/L 3 பாடங்களில் சித்தி
O/L ஆங்கில, கணித பாடங்களில் திறமைச் சித்தி

மேலதிக விவரங்களுக்கு:

CAREER.COM INSTITUTE

No. 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம்: திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை

(சி-23854)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

லொறன்ஸ் நடித்த ☆அற்புதம்☆

சிறிகாந், வடிவேல் நடித்த ☆என் மன வானிலே☆

I.T.N

பலாலி வீதி, யாழ்ப்பாணம். (C-23875)



**வீடியோ விமல்**

எமது புதிய வீடியோ CD வெளியீடு

☆ என் மன வானிலே
☆ அற்புதம்

(பிரதிகள் மதியம் பெற்றுக்கொள்ளலாம்.)

வீடியோ விமல்
(C-23873) யாழ்ப்பாணம்.



**இரசாயனவியல்**

02, 03, 04 ஆண்டிற்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.

டயஸ்

04 - THERMO
03 - ORGANIC PHYSICAL
ஆரம்பம்.

18/1, புது வீதி, அத்தியடி. (8416)



ஆரம்பமாகிறது! (கந்தர்மடம் சந்திக்கு அருகில்) கந்தபுராண வீதி.

**இணைந்த கணிதம்**

2003 A/L
சார்பு வேகம் (Fri, Sat, Sun 3.45 - 4.45)
2004 A/L
நிகழ்தகவு (Sat, Sun 4.45)
ஆரம்பம்: 21.09.2002
2002 A/L பரீட்சை எடுத்தவர்களுக்கான
Paper Class Sat, Sun (9.30 - 11.30) (a.m.)
தொகையீடு Tue, Wed, Fri 6.30 - 8.00 (p.m.) (புதிய நேரம்) (மின் ஒளியில்)

P.செந்தில்நாதன் B.Sc.

(8380)


## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா வல்லிபுரம்

அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, நல்லூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா வல்லிபுரம் அவர்கள் நேற்று(17.09.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற வே.வல்லிபுரத்தின்(தேநீர்க்கடை உரிமையாளர்) அன்பு மனைவியும், சரோயினிதேவி, சுதன்(சுதன் Arts) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பரமதயாளன்(ஆசிரியர்), சந்திரா ஆகியோரின் மாமியாரும், தயாதேவினி(முகாமைத்துவ உதவியாளர் - செங்குந்தா இந்துக்கல்லூரி), தேவகி, குமாரதாசன்(ஆசிரியர்), துவாரகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், திலீபனின் அன்புப்பூட்டியும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, சிவப்பிரகாசம்(ஆசிரியர்), சிதம்பரப்பிள்ளை (ஆசிரியர்) மற்றும் அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை (ஆசிரியர்) மற்றும் கந்தையா(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.09.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு பிற்பகல் 3மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/1,இராச வீதி,
நல்லூர்.

தகவல்:
வ.சுதன் (மகன்)

(8455)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.